
1992.



Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

அன்ரன் பாலசிங்கம்.

[illegible]
Tamileelam Archive

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

— அன்ரன் பாலசிங்கம்

வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

தொண்டமானின் சமரச முயற்சியும்
சிங்களப் பேரினவாதமும்

— அன்ரன் பாலசிங்கம்

முதற் பதிப்பு : சித்திரை, 1992.

அட்டை வடிவமைப்பு : தயா

வெளியீடு : வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

அன்பளிப்பு: **25/-** ரூபா

# நுழைவாயில்

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாணும் விருப்புடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் சிறீலங்காவின் கிராமிய கைத்தொழில் அமைச்சருமாகிய திரு. சௌ. தொண்டமான் அவர்கள் ஓர் தீர்வுத் திட்டத்தின் நகலைப் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

புலிகளின் தலைமைப்பீடத்துடனும் தனது தீர்வுத் திட்டம் தொடர்பாகக் கதைத்து, புலிகளின் கருத்தினையறிந்து செல்வதற்காக யாழ்ப்பாணம் வரவிரும்பிய அவரது முயற்சியை ஆதரித்த புலிகளும், யாழ்ப்பாணம் வருமாறு அவருக்கு அழைப்பும் விடுத்தனர்.

இதற்கிடையில் திரு. தொண்டமானினது தீர்வுத் திட்டத்திற்கு எதிராக சிறீலங்காவில் எழுந்த இனவாதப் புயல், தொண்டமானது தீர்வுத்திட்டத்தை அடித்துச் சென்றுவிட்டது.

திரு. தொண்டமானினது சமாதான முயற்சிக்குச் சாதகமாக புலிகள் எவ்விதம் நடந்துகொண்டனர் என்பது பற்றியும், அவரது தீர்வுத் திட்டத்துள் அடங்கியிருக்கும் விடயங்கள் தொடர்பாக புலிகளின் கருத்து என்ன என்பது பற்றியும், எமது இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இங்கு எடுத்து விளக்குகின்றார்.

அத்துடன், மக்களின் பார்வைக்காக இந்நூலின் பின்னிணைப்பாக, திரு.தொண்டமானினது தீர்வுத் திட்டத்தின் தமிழாக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது.

வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No..........

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வுகாணும் நோக்கில் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படும்போது அல்லது உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படும்போது சிங்களப்பேரினவாதப் பூதம் தலைதூக்குவதும் அதன் கோரத் தாண்டவத்தால் அந்தச் சமரச முயற்சிகள் இடைநடுவே கைவிடப்படுவதும், இலங்கை அரசியல் வரலாற்றில் காலத்திற்குக் காலம் அரங்கேற்றப்படும் ஒரு தொடர் நாடகம் என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள். தொண்டமானின் சமீபத்திய சமாதான முயற்சியும் இந்தத் துன்பியல் நாடகத்தின் ஒரு சோகமான கட்டமாக முடிவு பெற்றிருக்கிறது.

தொண்டமானின் சமரச முயற்சியும், அவர் முன்வைத்த தீர்வுத் திட்டமும், விடுதலைப் புலிகளுடனேயே நேரடியாகப் பேசவேண்டுமென அவர் கொண்டிருந்த நிலைப்பாடும், இதன் எதிர் விளைவாக தென்னிலங்கையில் எழுந்துள்ள பெரும் சர்ச்சையும், பேரினவாத எழுச்சியும் இன்று உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு விஸ்வரூபம் பெற்றிருக்கிறது. தமிழரின் இனப்பிரச்சினையோடும், விடுதலைப் புலிகளின் போராட்டத்தோடும் பின்னி நிற்கும் இந்த விவகாரத்தை எமது மக்கள் முழுமையாக அறிந்து கொள்வது அவசியம். அத்தோடு சிங்களப் பேரினவாதத்தின் தன்மையையும் அரசியல் தீர்விலுள்ள சிக்கல்களையும் இது தெளிவாகக் காட்டும் இந்த நோக்கத்துடனேயே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல்ரீதியான தீர்வு காண வேண்டுமென்றால் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனேயே நேரடியாகப்பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டை திரு. தொண்டமான் நீண்ட காலமாகவே கொண்டிருந்தார். விடுதலைப் புலிகள் இயக்கம்தான் தமிழீழ மக்களின் உண்மையான போராட்ட சக்தி என்பதையும், புலிகளை இராணுவ ரீதியில் அடக்கி விடவோ அழித்து விடவோ முடியாது என்பதையும், அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். இது சம்பந்தமாக அவர் பகிரங்கமான அறிக்கைகளையும் வெளியிட்டு வந்தார். இந்தியாவின் இராணுவத் தலையீடும், தமிழரின் ஆதரவை இழந்த ஆயுதக் குழுக்களை அதிகாரத்தில் அமர்த்த இந்திய அரசு மேற்கொண்ட முயற்சி

களும், அதனால் ஏற்பட்ட தோல்விகளும், விடு தலைப்புலிகளின் இலட்சிய உறுதியும் போராட்டத் திறனும் திரு. தொண்டமானுக்கு சில அரசியல் உண்மைகளை உணர்த்தியிருக்கலாம். இதனால் புலிகள் இயக்கத்தின் முக்கியத்துவத்தை அவர் சரியாக எடை போட்டிருந்தார். எனவே இந்தியா வினதும், பிரேமதாசா அரசினதும் அடிவருடி களாகச் செயற்பட்டு வரும் ஏனைய தமிழ்க் குழுக்களை நிராகரித்துவிட்டு, விடுதலைப் புலி களுடன் தொடர்பு கொண்டு ஒரு சமரச முயற் சியை மேற்கொள்ள திரு. தொண்டமான் விரும் பினார்.

திரு. தொண்டமான் எதற்காக இந்தச் சமரச முயற்சியை ஆரம்பித்தார் என்பது ஒரு பெரிய கேள்வி. இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்டு, இலங்கைத் தீவைப் பெரும் அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் பிரேமதாசா அரசுக்குக் கைகொடுத்து உதவ விரும்பினாரா? அல்லது தமி ழன் என்ற ரீதியில் தமிழீழ மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண வேண்டுமெனத் துணிந்தாரா? அன்றி, அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு முன்னராக ஏதா வது அர்த்தமுள்ள உருப்படியான காரியத்தைச் சாதித்துவிடலாம் என எண்ணினாரா? அல்லது மலையகத்து அரசியல் நிர்ப்பந்தங்கள் அவரைத் தூண்டி விட்டதா? ஏதோ ஒரு காரணத்தால் உந்தப்பட்டு திரு. தொண்டமான் இந்த அக்கினிப் பரீட்சையில் காலை வைத்தார்.

கடந்த ஜூலை மாத முற்பகுதியில் திரு. தொண்டமான் தனது பிரதிநிதி ஒருவரை யாழ்ப்

பாணத்திற்கு அனுப்பிவைத்தார். விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடு என்ன? தமிழீழத் தனியரசுக் கோரிக்கைக்கு மாற்றுத்திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டால் புலிகள் அதனைப் பரிசீலனை செய்வார்களா? சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவார்களா? திரு. தொண்டமான் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தால் அவருக்குப் பாதுகாப்பு அளிப்பார்களா? இப்படியான வினாக்களுக்கு விடை தேடி இந்தப் பிரதிநிதி யாழ்ப்பாணம் வந்து எம்மைச் சந்தித்தார். சமாதானப் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை நாம் அவருக்குத் தெளிவாக விளக்கினோம். சமாதானக் கதவுகள் திறந்திருக்கின்றன; திரு. தொண்டமான் எப்பொழுதும் யாழ்ப்பாணம் வரலாம்; புலிகளுடன் பேச்சுக்களை நடத்தலாம் என நாம் அவரிடம் கூறினோம்.

எமது நிலைப்பாடு திரு. தொண்டமானுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர் மாநாடு ஒன்றின்போதும் திரு. தொண்டமானை யாழ்ப்பாணம் வரவழைத்து ஒரு பகிரங்க அறிவிப்பையும் விடுத்தோம்.

## தொண்டமானின் முதற் கடிதம்

27. 8. 1991 திகதியிடப்பட்ட தனது முதலாவது கடிதத்தை அமைச்சர் தொண்டமான் எமது இயக்கத் தலைவர் திரு.வே.பிரபாகரனுக்கு அனுப்பிவைத்தார். அதில் கூறப்பட்டிருப்பதாவது:

அன்புடையீர்,

நீண்ட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து தமிழ் மக்கள் எல்லோரும் விரும்பி நிற்கும் நல்லதோர் தீர்வினை உருவாக்குவதற்கு நான் பல காலமாக முயன்றுள்ளேன். இதன் பலாபலன் அனுகூலமாகக் கூடிய சாத்தியககூறுகள் இப்போது தென்படுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் சமாதான முயற்சியை மேலெடுத்துச் செல்வதற்கு உங்களது இயக்கம் எனக்கு விடுத்துள்ள பகிரங்க அழைப்பை ஏற்றுககொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையில் ஒரு நிரந்தரத் தீர்வைச் சிந்திக்க முடியும். தமிழர்களின் அபிலாசைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய திட்ட வட்டமான கருத்துக்களை நீங்கள் வரையறுத்திருப்பீர்கள். இதுவிடயமாக எனது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சில சிந்தனைகளை உருவாக்கியுள்ளது. இவற்றை நான் அனுப்பி வைக்கிறேன். உங்களின் கருத்துக்களையும் எனக்கு அனுப்பி வைத்தால் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க உதவியாக இருக்கும்.

நான் ஒரு தமிழன் என்ற முறையிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் என்ற ரீதியிலும் இந்த யோசனைகளை அனுப்பி வைக்கிறேன். இந்தக் கருத்துக்களும் சிந்தனைகளும் அரசாங்க சார்பற்றவையாகக் கருதப்பட வேண்டும். உங்களது பதிலும் ஆலோசனைகளும் கிடைத்ததும் அவசிய மேற்படின் உங்களுடன் மீண்டும் தொடர்பு கொள்வேன்.

இங்ஙனம்,
உங்கள் விசுவ சமுள்ள
செள. தொண்டமான்

திரு. தொண்டமான் அனுப்பி வைத்த யோசனைகள் ஒரு முழுமையான தீர்வுத் திட்ட வடிவமைப்பைக் கொண்டிருக்கவில்லை. நிலவுரிமை, பாதுகாப்பு, பொருளாதாரத் திட்டமிடுதல், பொதுசேவை போன்ற விடயங்களையும்;

வேறு சில துறைகள் சார்ந்த அதிகாரப் பரவலாக்கம் பற்றியுமே மிகச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்ததே தவிர, வேறு விளக்கம் எதுவும் தரப்படவில்லை.

இந்த யோசனைகளில் 'மாகாண அரசு' என்ற சொற் பிரயோகம் கையாளப் பட்டிருந்ததே தவிர தமிழர் தாயகத்தின் பிரதேச அந்தஸ்து, சுயாட்சி உரிமை, ஆட்சி அதிகாரம் எதுவும் பற்றித் தெளிவான விளக்கமோ வரையறைகளோ இருக்கவில்லை. ஒரு சில திருத்தங்கள் செய்யப்பட்ட பழைய மாகாண சபைத் திட்டத்தின் அடிப்படைகளைக் கொண்டது போல, இந்த யோசனைகள் அமைந்திருந்தன. இது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

## கடிதங்கள்மூலம் பேச முடியாது

திரு. தொண்டமானை நாம் யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்து, அவருடன் நேரடியாகப் பல விடயங்கள் பற்றிப் பேசுவதற்குத் தீர்மானித்திருந்தோம். எமது அழைப்பை ஏற்று இங்கு வருவதற்குப்பதிலாக கடித மூலமாகக் கருத்துக்களைப் பரிமாறி, எழுத்துமூலமாகப் பேச்சுவார்த்தைகளை நடத்த அவர் முனைவது போல, எமக்குத் தோன்றியது. அத்துடன் அவர் தமது யோசனைகள் அரசாங்க சார்பற்றது என வலியுறுத்திக் கூறியதும் எமக்கு உற்சாகத்தை அளிக்கவில்லை. எனவே, திரு. தொண்டமானுக்குக் கீழ்க்கண்ட பதிலை அனுப்பிவைத்தோம்.

அன்புடையீர்,

எமது இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு நீங்கள் 27 - 8 - 91இல் அனுப்பிவைத்த கடிதத்தைப் பெற்றுக்கொண்டோம். கடிதம் கிடைக்கப் பெற்ற தகவலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக உங்களுக்கு அறியத்தந்தோம். நீங்கள் இந்தியா சென்றிருந்ததால் உடன் பதில் எழுதுவது தாமதமாகியது.

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நீங்கள் முன்வைத்த யோசனைகளை, நாம் கருத்தில் எடுத்துக் கொண்டோம். அரசியல் தீர்வு குறித்து எமது இயக்கத்தின் கருத்துக்களையும் கேட்டிருந்தீர்கள்.

ஒரு உருப்படியான தீர்வுத்திட்டத்தை நோக்கிய கருத்துப் பரிமாற்றங்களும், விளக்கங்களும் கடித மூலம் வைத்துக்கொள்வது நடைமுறைக்குச் சிரமமானது. அத்துடன், சமாதானப் பேச்சுக்களைத் தொடர இது உகந்த வழிமுறையும் அல்ல, நேரடியாகச் சந்தித்துக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதே சிறந்த வழியாகும்.

ஆகவே, நாங்கள் ஏற்கெனவே விடுத்த அழைப்பினை ஏற்று, யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து எமது நிலைப்பாட்டை அறிந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். இது, சமாதான முயற்சியை மேலெடுத்துச் செல்வதற்கு வாய்ப்பானதாக அமையும் என, நாம் கருதுகிறோம்.

*இங்ஙனம்,*
*உங்கள் உண்மையுள்ள*
*கோ. மகேந்திரராசா.*

தமிழீழத் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் சிங்கள அரசு ஒரு முழுமையான யுத்தத்தை நடத்திக் கொண்டு, பொருளாதாரத் தடைகளை விதித்துத் தமிழ் மக்களைப் பெரும துன்பத்தில் தள்ளி விட்டிருக்கும் ஒரு நெருக்கடியான நேரத்தில் பேச்சுக்களை ஆரம்பிப்பதென்றால், அதற்கான ஒரு சமரச, நல்லெண்ணச் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் நலனில் அக்கறையும், அரசியல் தீர்வில் உண்மையான ஆர்வமும் இருந்தால் அரசாங்கம் முதற்படியாக ஒரு சமாதானச் சூழ்நிலையை உண்டு பண்ண உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒரு புறம் பெரியதொரு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது நடைமுறைச் சாத்தியமாகாது.

இதனை நாம் திரு. தொண்டமானின் பிரதிநிதியிடம், தெளிவாக விளக்கியிருந்தோம். அரசாங்கத்தின் இராணுவ, பொருளாதார அழுத்தங்கள் மத்தியில் சுயாதீனமான சமரசப் பேச்சுக்கள் நடத்துவதிலுள்ள சிரமங்களைத் திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் வரும்பொழுது எடுத்து விளக்கலாமென, முடிவு செய்திருந்தோம். அத்துடன், திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்து, எமது மக்களையும் நேரில் சந்தித்துப் பேச வேண்டும் எனபதிலும், நாம் அக்கறையாக இருந்தோம்.

26-09-1991 இல் திரு.தொண்டமான் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு.மகேந்திரராசாவுக்கு பதில் கடிதம் எழுதியிருந்தார். தனது யோசனைகளுக்கு விடுதலைப்

புலிகள்பதிலளிப்பது அவசியமென்றும், அப்பொழுது தான் இருதரப்பினருக்கும் ஒத்திசைவான ஒரு தீர்வுத் திட்டத்தை வகுக்கலாம் என்றும், இக்கடிதத்தில் திரு.தொண்டமான் வலியுறுத்தியிருந்தார்.

*"ஒரு சிக்கலான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கருத்துக்கள் மட்டுமல்ல அணுகுமுறைகளும் அத்தியாவசியம். நாம் யதார்த்தமான முறையில் செயற்படவேண்டும். எமது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உங்களுக்குச் சமர்ப்பித்த கருத்துக்கள் பற்றி நீங்கள் அளிக்கும் விமர்சனங்களும் அபிப்பிராயங்களும், இருசார்பினரின் கருத்துக்களும் இணைந்ததோர் திட்டத்தை உருவாக்க ஏதுவாக இருக்கும். அத்தோடு எமது சந்திப்பிற்கும் வழிவகுக்கும். இந்த அடிப்படையில் எமது சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்ல உங்கள் ஒத்துழைப்பை நாடுகின்றேன்" என்று திரு.தொண்டமான் குறிப்பிட்டிருந்தார்.*

விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசுவது என்றால் அது உலகத்தின் கவனத்தை ஈர்க்கும். அத்தோடு உள்நாட்டில் பெரும் சர்ச்சையையும் ஏற்படுத்தும் என்பதை திரு.தொண்டமான் உணராமல் இல்லை. சிங்களப் பேரினவாத சக்திகள் சும்மா இராது என்பதும் அவருக்குத் தெரியும். அதனைத் தனது கடிதத்தில் நாசுக்காகச் சுட்டிக் காட்டவும் அவர் தவறவில்லை.

*"எத்தகைய சூழ்நிலையில் நாம் செயற்படுகிறோம் என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். ஈழத்தமிழரின் பிரச்சினை உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. எனவே எமது சந்திப்பு சர்வதேச ரீதியில் விமர்சனங்களை உருவாக்கும். எமது நாட்டில் இன்று உருவாகியுள்ள சூழ்நிலையில் எமது சந்திப்பை பல்வேறு அரசியல் கட்சிகளும் ஒரு நிலையான தீர்வுக்குக் குந்தகம் விளைவிக்கும் விதத்தில் விமர்சிக்கலாம். அத்தோடு மாறுபட்ட முறையில்*

செயற்படவும் முனையலாம். எனவே நாம் ஒத்துக்கொள்ள கூடிய முக்கிய கருத்துக்கள் அடங்கிய ஒரு திட்டம் எமது பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அத்தியாவசிய மாகின்றது.''

யாழ்ப்பாணம் வருகைதந்து எம்மை நேரில் சந்தித்துப்பேச்சுக்களைத் தொடங்குவதற்கு முன்னர், நாம் தெரிவித்த யோசனைகளுக்கு விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை அறிந்து கொள்ளுவதில் திரு. தொண்டமான் விடாப்பிடியாக இருக்கிறார் என்பது, அவரது கடிதத்திலிருந்து புரிந்தது. எனவே திரு.தொண்டமானுக்கு விபரமாக ஒரு கடிதம் எழுத நாம் நிர்ப்பந்திக்கப் பட்டோம்.

## சமாதானச் சூழலும் தடைகள் நீக்கமும்

அரசியல் தீர்வுக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முதற்படியாக தமிழர் தாயகத்தில் ஒரு அமைதிச் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். இராணுவ, பொருளாதார ரீதியில் இரு பரிமாணங்களில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் அழுத்தங்கள் தளர்த்தப்பட்டு, ஒரு இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். சிங்கள இனவாதப் பிடியில் சிக்கித் திணறும் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பிறப்பிக்க வேண்டும். இந்தக் கருத்துக்களை வலியுறுத்தி திரு மகேந்திரராசா அமைச்சர் தொண்டமானுக்கு 30-10-1991இல் ஒரு விரிவான கடிதம் எழுதினார்.

“சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. எனி

னும் சமாதானப் பேச்சுகளுக்கு முன்னோடியாக ஓர் அமைதியான, நல்லெண்ணச் சூழ்நிலை உரு வாக்கப்படுவதன் அவசியத்தையும் முக்கியத்துவத் தையும் நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறோம். ஆயினும் அரசாங்கத்தின் நடவடிக் கைகள் ஒரு நல்லெண்ணச் சூழ்நிலைக்கு ஒத்தி சைவானதாக அமையவில்லை என்பது, வெளிப் படையான உண்மை. இராணுவ ரீதியாகவும், பொரு ளாதார ரீதியாகவும் இருமுனைகளில் சிறீலங்கா அரசு, தமிழ் மக்கள் மீது பாரிய அழுத்தத்தைப் பிரயோகித்து வருகிறது.ஒருபுறம். தமிழ் மண்ணில் இராணுவ விரிவாக்கத்தை நடத்திக்கொண்டு, மறு புறம் பொருளாதார நெருக்குதலையும் தீவிரப்படுத்தி, எமது மக்கள்மீது தாங்கொணாத் துன்பப் பளு வைச் சுமத்தி வருகிறது. இவ்விதமான இராணுவ பொருளாதார நெருக்குதல்நிலை, சமாதான அணுகு முறைக்குப் பாதகமாகவே அமையும். ஏனென்றால் இந்த நெருக்குதல் நிலை தமிழர் மீதான ஓர் அழுத்த மாகத் திணிக்கப்படுவதால், இச்சூழலில் சமத்துவ மான சுதந்திரமான பேச்சுக்கள் நிகழ்வது கடினம்.

தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான, நிரந்தர மான தீர்வைக் காண அரசு தரப்பில் உண்மை யான நேர்மையான அக்கறை இருக்குமாயின் இந்த இராணுவ - பொருளாதார அழுத்த அணுகு முறை கைவிடப்பட வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் வகையில் ஒரு நல் லெண்ணச் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். ஒரு சமரசச் சூழ்நிலையில்தான் சமாதானப் பேச்சுக் களை நடத்தலாம் என்பதை நாம் உங்களுக்கு விளக்கிக் கூறத் தேவையில்லை இதற்கு மாறாக, தமிழ் மண்ணில் இராணுவ மேலாதிக்கத்தைத்

திணித்து, பொருளாதாரத் தடைகளை இறுக்கி, தமிழ் மக்களைத் துப்பாக்கி முனையில் நிறுத்தி, தான் வரித்த வரையறைக்குள், தான் விதித்த நிபந்தனைக்குள் பிரச்சினையைத் தீர்க்கலாமென அரசு சிந்திக்குமானால், அது மாபெரும் அரசியல் தவறாகவே முடியும். இத்தகைய அணுகுமுறையை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை'' என, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்.

## ஒற்றையாட்சியும் சுயாட்சியும்

சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் சட்டவாக்க வடிவமான இன்றைய ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழ், தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. முற்று முழுதாக சிங்களப் பெரும்பான்மை மக்களின் தேசிய, பண்பாட்டு நலன்களைப் பேணுவது மாத்திரமின்றி பிரதேச ஒருமைப்பாடு என்ற கோட்பாட்டின் கீழ் முழு இலங்கைத் தீவையும் சிங்களவரின் தாயகமாகக் கொள்ளும் இந்த இறுக்கமான யாப்பமைப்பு, தமிழரின் நில உடைமைப்பாட்டையும் தேசியத் தனித்துவத்தையும் மறுக்கிறது. தமிழ் மக்களின் இறைமையையும் தன்னாட்சி உரிமையையும் மறுக்கிறது. அரச ஆட்சியதிகாரம் முழுவதும் ஜனாதிபதியிடமும் பெரும்பான்மையினர் ஆட்சி செலுத்தும் பாராளுமன்றத்திலும் ஒருமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. இப்படியான ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் உருப்படியான ஒரு மாநில சுயாட்சி அமைப்பைக் கட்டியெழுப்ப முடியாது. தமிழருக்கு 'சுயாட்சி

அரசு' என்ற கோட்பாட்டின் கீழ் இந்திய அரசு திட்டமிட்டுக் கொடுத்த மாகாண சபை நிர்வாக மும், அதிகார வறுமையால் செயலிழந்து போனது இதற்கு ஒரு நல்ல உ தா ர ண ம். இந்த அடிப் படையில் திரு. தொண்டமான் சமர்ப்பித்த யோசனைகளை திரு. மகேந்திரராசா, த ன து பதில் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு சுட்டிக் காட்டு கிறார்.

"உங்களது யோசனைகள் தமிழர் பிரச்சினை யின் சில அடிப்படை அம்சங்களை (குறிப்பாக நிலவுரிமை, குடியேற்றம், பாதுகாப்பு, பிரதேச அபி விருத்தி) தொட்டு நிற்பினும் ஒரு முழுமையான தீர்வுத் திட்ட வடிவமைப்பினைக் கொண்டதாக இல்லை. இந்திய - இலங்கை உடன்பாட்டில் பிரேரிக் கப்பட்டு, பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத் தத்தால் சட்டவாக்கம் பெற்ற பழைய மாகாண சபைத் திட்ட வரையறைக்குள் இந்த யோசனைகள் உட்படுத்தப்பட்டது போலத் தெரிகிறது.

மாகாணசபைத் திட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை எல்லாம் இங்கு பிட்டுக் காட்டு வது அவசியமல்ல. இது நடைமுறைப் படுத்தப்பட்டு தோல்வி கண்ட ஒரு தீர்வுத் திட்டம் என்பதும், உங் களுக்குத் தெரியாததல்ல. சிங்களப் பெரும்பான்மை யினரின் அபிலாசைகளை மட்டும் பேணிப் பாதுகாக் கும் ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழ், மத்திய அரசிடம் அனைத்து ஆட்சியதிகாரங்களும் ஒருமுகப் படுத்தப்பட்டிருக்கும் போது, பிரதேச ரீதியில் உருப் படியான சுயாட்சித் திட்டம் எதையும் உருவாக்குவது சாத்தியமல்ல என்பதே, எமது கருத்து. நீண்டகால வரலாற்று அனுபவம் இந்த அரசியல் உண்மையை

எடுத்தியம்புகிறது. இந்தியத் தலையீடும் இந்த வரலாற்று அனுபவத்தையே கற்றுக் கொண்டது''.

## தமிழர் பிரச்சினை தேசியப் பிரச்சினை

தமிழீழ மக்களின் பிரச்சினை ஒரு சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினை என்ற வகையில் சிறீ லங்கா அரசு கொடுத்துவரும் வியாக்கியானத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்கவில்லை இலங்கைத் தீவில் பல மொழிகள், பல மதங்கள், பல பண்பாடுகள் கொண்ட பல இனக்குழுக்கள் வாழ்ந்து வருகிறார்கள் எனக் கூறும் பல்லினக் கோட்பாட்டை முன்வைத்து தமிழரின் தாயகத்தையும், தேசிய தனித்துவத்தையும் மூடி மறைக்க முற்படும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் விதண்டா வாதங்களையும் புலிகள் இயக்கம் ஏற்கவில்லை. தமிழீழ மக்களின் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை. அவர்களது தாயகமும் தேசியமும் தன்னாட்சி உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்தத் தேசிய அந்தஸ்தின் அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே எமது மக்களின் பிரச்சினை அணுகப்பட வேண்டும். இதன் அடிப்படையிலேயே ஒரு தீர்வுத்திட்டம் நெறிப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தையும், புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் இக் கடிதத்தில் வலியுறுத்தினார்.

''தமிழீழ மக்களின் தேசிய அந்தஸ்து அங்கீகரிக்கப்பட்டு, அவர்களது தேசிய அபிலாசைகள் பூர்த்தியாகும் வகையில் ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டால், நாம் அதனைப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறோம். இந்தக் கருத்தை

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA

நாம் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறோம். இப்படியான ஒரு நியாயமான நாகரிக உலகம் ஏற்றுக் கொள்ளும் முற்போக்கான தீர்வுத் திட்டங்களை சிங்கள அரசியல்வாதிகள் சாதகமாக கருத்தில் எடுத்துக் கொள்வார்களா என்பதும் சந்தேகமே.''

புலிகள் இயக்கத்திற்கு இப்படியான ஒரு சந்தேகம் எழுவதில் நியாயம் இருக்கத்தான் செய்தது. ஏனென்றால் சிங்களப் பேரினவாதத்தின் நீண்ட, கசப்பான வரலாற்றை எமது இயக்கம் நன்கு அறியும். அத்தோடு, தனது திட்டம் அரசாங்க சார்பற்றது என்றும், தனது தொழிற் சங்கத்தின் சிந்தனைக் குழந்தை என்றும் திரு. தொண்டமான் வலியுறுத்தியுள்ளார். அரசாங்கத்தினதும், சிங்கள எதிர்க்கட்சிகளதும் ஒப்புதல் இல்லாது போனால் இந்தச் சமரச முயற்சியில் அர்த்தம் இராது. அப்படி நிகழும் பேச்சுக்கள் விடுதலைப் புலிகளுக்கும் திரு. தொண்டமானின் தொழிற் சங்கத்திற்கும் மத்தியில் நிகழும் பேச்சுக்களாகவே அமையும். ஆகவே திரு. தொண்டமானின் யோசனைகளுக்கு தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் ஆதரவு முதலில் திரட்டப்பட வேண்டும். இதனை வலியுறுத்தி, திரு. மகேந்திரராசா தனது கடிதத்தில்,

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நீங்கள் சமர்ப்பித்த கருத்துக்களில் முற்போக்கான, வரவேற்கத்தக்க அம்சங்கள் அடங்கியுள்ளன. இவை பற்றி எமது முழுமையான விமர்சனத்தைத் தெரிந்து கொள்வதற்கு முன்னர் இந்தக் கருத்துக்கள் குறித்து ஆளும் கட்சியினதும் எதிர்க்கட்சிகளதும் நிலைப்பாடு எப்படியாக உள்ளது என்பதை நீங்கள் முதலில் அறிந்திருப்பது அவசியம் அல்லவா?''
என்று சுட்டிக் காட்டினார்.

சமாதானப்பேச்சு வார்த்தைகளுக்கு விடு தலைப் புலிகள் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்க வில்லை. போர் நிறுத்தத்தையும் முன் நிபந்த னையாக வரிக்கவில்லை. ஆயினும் சமாதானப் பேச்சுக்கள் அழுத்தங்கள், நெருக்குதல்களின் கீழ் நடைபெறுவதை புலிகள் இயக்கம் விரும்ப வில்லை. ஆகவேதான் இராணுவ, பொருளா தார அழுத்தங்கள் நீங்கிய ஒரு சுமுக சூழ் நிலையை நாம் வலியுறுத்தினோம்.

ஆனால் பிரேமதாசா அரசு போருக்கு ஓய்வு கொடுத்து ஒரு அமைதி நிலையை ஏற்படுத்து வதையோ எமது மக்கள்மீது திணிக்கப்பட்ட பொரு ளாதாரப் பளுவை நீக்குவதையோ விரும்பவில்லை. இவ்வித நெருக்குதல்கள் மக்களின் மனவுறுதியை உடைத்து, போராட்ட உணர்வை மழுங்கடித்து, பணிந்து போகும் அல்லது விட்டுக்கொடுக்கும் ஒரு மனப்பான்மையை உருவாக்கும் என எண்ணி பிரேமதாசா அரசு அகந்தைப் போக்கைக் கடைப் பிடித்தது. எனவே, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப் பதற்கு முன்னராக ஒரு சமாதான சூழ் நிலையை உருவாக்க அரசாங்கம் இலகுவில் இணங்காது என்பது எமக்குத் தெரியாதது அல்ல. எனவேதான் போர் நிறுத்தத்தை முன்நிபந்தனையாக விதிக்கா மல், ஒரு சுமுக சூழலில் பேச்சுக்கள் நடைபெறு வதின் தேவையையும், முக்கியத்துவத்தையும் நாம் திரு. தொண்டமானுக்கு வலியுறுத்தினோம். எமது கோரிக்கையில் அடங்கியுள்ள மனிதாபிமானத் தன்மையையும் நியாயத்தையும் திரு. தொண்ட மான் கருத்தில் எடுத்துக் கொண்டாலும் அரச தரப்பிலிருந்து, குறிப்பாக இராணுவத் தலைமை யிலிருந்து ஒரு சாதகமான பதிலை அவர் பெற்றுக்

கொள்ள முடியவில்லை. எனவே, சுமுக சூழலை உருவாக்கும் விடயத்தில் திரு. தொண்டமான் ஒரு நொண்டிச் சாட்டினை முன் வைத்துச் சறுக்க முயன்றார். 11 - 11 - 1991 இல் திரு. மகேந்திரராசாவுக்கு எழுதிய பதில் கடிதத்தில்:

*"பேச்சுவார்த்தைக்குரிய நல்லதோர் சூழ்நிலை விரைவில் உருவாகும் என ஊகிப்பதற்கு இடமுண்டு. இராணுவ, பொருளாதார நெருக்கடியற்ற சுமுகநிலையின் அத்தியாவசியத்தை வலியுறுத்தினீர்கள். நான் அதைக் கருத்திற்கொண்டுள்ளேன். ஆனால் முன்னர் 14 மாதங்களாக யுத்தமற்ற சூழ்நிலை இருந்த போதும், அரசாங்கம் தனது நேசக்கரத்தை நீட்டியிருந்த போதும், பேச்சுவார்த்தைகள் சமாதானத்தில் நிறைவு பெறாத பின்னணியில் போர் நிறுத்தத்தைக் கோருவது சிரமமாகவிருக்கிறது''* எனக் குறிப்பிட்டார்.

## நேசக் கரத்தை நீட்டியது யார்?

விடுதலைப் புலிகள் பிரேமதாசா அரசுடன் 14 மாதங்கள் தொடர்ந்து பேசியும் அந்தப் பேச்சுக்கள் சமாதானத்தில் நிறைவு பெறாதமைக்கு புலிகள்தான் காரணம் என்ற தொனியில், அவரது கருத்து அமைந்தது. இதனை ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக்கி திரு. தொண்டமானுடன் நாம் வாதப் பிரதிவாதங்களை எழுப்ப விரும்பவில்லை; அதனால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு வடகிழக்கிலும், ஜே. வி. பி. யின் அட்டகாசம் தெற்கிலுமாக ஒரு பெரிய நெருக்கடிக்குள் சிக்கியிருந்த பிரேமதாசா, விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு வருமாறு மன்றாடினார். அப்பொழுது அவருக்கு நேசக்கரத்தை நீட்டியது புலிகள்தான். கொழும்பில்

பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் புலிகள் இயக்கத்துடன் போர் ஓய்வு வேண்டுமென இரந்து கேட்டதும் பிரேமதாசா அரசுதான். புலிகள் இயக்கம் நேர்மையுடனும் நல்லெண்ணத்துடனும் நடந்து கொண்டது.

14 மாதங்களாகத் தொடர்ந்து இழுபட்ட இந்தப் பேச்சுக்களின் போது, பிரேமதாசா அரசு எந்தவொரு உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. ஒருபுறம் புலிகளுடன் பேசிக் கொண்டு, மறுபுறம் சர்வகட்சி மாநாட்டை அரங்கேற்றி காலத்தைக் கடத்த முயன்றது. கொழும்பில் புலிகளோடு நடத்திய பேச்சுக்களில் இனப் பிரச்சினையின் அடிப்படைகள் எதுவும் தொடப்படவில்லை. பிரேமதாசாவுடன் பேசி ஒரு உருப்படியான, நிரந்தரமான தீர்வு எதையும் பெற்றுக்கொள்ள முடியாது என உணர்ந்து கொண்ட நாம், ஒரு இடைக்காலத் தீர்வை விரும்பினோம். அந்த வேளையில் நாம் அரசாங்கத்திடம் இரண்டு கோரிக்கைகளை மட்டும் விடுத்திருந்தோம். ஒன்று, மாகாண சபையைக் கலைத்துவிட்டு புதிதாகத் தேர்தலை நடத்துவது. இரண்டாவது, அரசியல் யாப்பின் ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்குவது. இந்த இரண்டு கோரிக்கைகளைக் கூட நிறைவேற்றத் துணிவின்றி பிரேமதாசா காலத்தைக் கடத்தியதோடு, சர்வகட்சி மாநாட்டிற்கு முதலுரிமை கொடுத்தார். இது ஒருபுறமிருக்க, ஜே. வி. பி. இயக்கத்தை அழித்துவிட்ட இறுமாப்பில் சிங்கள இராணுவம் புலிகளுடன் உரசத் தொடங்கியது. இன்னொரு புறத்தில், நாம் ஆயுதங்களைக் கையளிக்க

வேண்டுமென, பிரேமதாசாவின் தூண்டுதலின் பேரில் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா எம் மீது அழுத்தம் போட்டார். இந்த முரண்பாடு கள் முற்றித்தான் மீண்டும் போர் வெடித்தது. நாம் அன்புக் கரம் நீட்ட, அரசாங்கம் அதைப் பற்றிக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. பௌத்த காருண்யம் என்ற போர்வைக்குள் துப்பாக்கியை ஒளித்து வைத்திருப்போரிடம், நாம் நீதியையும் தர்மத்தையும் எதிர்பார்க்க முடியாது.

திரு. தொண்டமானின் சீண்டலுக்கு நாம் விளக்கமளித்து வீண் விதண்டா வாதங்களுக்குள் இறங்க விரும்பவில்லை. கடிதப் பரிமாற்றங்களில் சர்ச்சைகளை எழுப்பாமல் திரு. தொண்டமானை நேரில் சந்திக்கும்போது கதைக்கலாமென எண்ணினோம்.

## பிரகடனம் செய்யாத போர் நிறுத்தம்

போர் நிறுத்தம் சம்பந்தமாக திரு. தொண்டமான் இந்தக் கடிதத்தில் புலிகளுக்கு ஒரு யோசனையைத் தெரிவித்தார். பகிரங்கமாகப் பிரகடனம் செய்யாமல் புலிகள் இயக்கம் போர் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ள வேண்டும். சமாதான நிலைமையை உருவாக்கும் பொறுப்பை நாம் மேற்கொள்வோமானால் அரசாங்கத்துடன் தான் பேசி, அவர்களையும் சமாதான முயற்சிக்குத் தூண்டலாம் என ஆலோசனை கூறியிருந்தார்.

*"பிரகடனப்படுத்தப்படாத சண்டையற்ற நிலை நிரந்தரப் போர் நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் என்பது எனது கருத்து. எனவே, ஒரு பக்கத்தில் தொடங்கும் சமாதான முயற்சி, மறு பக்கத்தில் நல்லெண்ணத்தை வளர்ப்பதோடு பேச்சுவார்த்தைக்குச் சாதகமான நம்பிக்கை நிலைமையை*

ஏற்படுத்தலாம். அடுத்து வரும் காலத்தில் சமாதான நிலைமையை உருவாக்கும் பொறுப்பை நீங்கள் கூடியளவுக்கு மேற்கொண்டால் இது போற்றத்தக்க செயலாகும். இப்படி நீங்கள் நடந்து கொண்டால் அரசாங்கமும் அப்படிப்பட்ட நிலையை உருவாக்கவேண்டுமென நான் வற்புறுத்துவேன்' என்று திரு. தொண்டமான் குறிப்பிட்டிருந்தார்.

இந்த யோசனை எமக்கு ஆக்கபூர்வமானதாகத் தோன்றவில்லை. நடைமுறைச் சாத்தியமானதாகவும் தெரியவில்லை. வவுனியா, முல்லைத்தீவு எல்லைப் பகுதியிலும், மன்னார்ப் பிரதேசத்திலும் அரச படைகள் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றன. கிழக்கிலும் சண்டை தொடர்கிறது. ஆகாயக்குண்டு வீச்சுக்களும் அகோரமாக நிகழ்கிறது அரசபடைகள் மூர்க்கமாக ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தும்போது நாம் ஆயுதங்களை வைத்துவிட்டுக் கைகட்டி நிற்பதா? அப்படியான யுத்தநிறுத்தம் தற்கொலைக்கு ஒப்பானது அல்லவா? முதலில், ஆக்கிரமிப்புப் போரை நடத்துபவன் அல்லவா சண்டையை நிறுத்தவேண்டும். அல்லது இரு தரப்பும் இணங்கி, ஒரே சமயத்தில் போரை நிறுத்திக்கொள்ளவேண்டும். அதை விடுத்து தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட்டு நிற்பவர்களை ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்யச் சொல்வது யுத்த தர்மம் ஆகாது.

ஏற்கெனவே, சென்ற புத்தாண்டில் சில வெளிநாட்டு அரசுகளின் கோரிக்கையின் பேரில் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் அறிவித்து, சமாதானப் பேச்சுக்கு இணங்கிய போது, அரசாங்கம் அதனை நிராகரிக்கவில்லையா? ஆயுதப் படைகள் பகிரங்கமாகவே யுத்தத்தை மீறவில்லையா? அப்பொழுது யுத்த நிறுத்தத்தை நாம்

பகிரங்கமாகப் பிரகடனம் செய்தோம். அதனை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. சமாதானத்திற்கு நாம் விடுத்த சமிக்ஞையை பலவீனத்தின் அறிகுறியாகவே அரசாங்கம் அப்பொழுது தப்புக் கணக்குப் போட்டது. திரு. தொண்டமான் தெரிவித்த பிரகடனப்படுத்தப்படாத போர் நிறுத்தம் நடைமுறைப்படுத்த முடியாத காரியம். இராணுவ ரீதியில், போர்த்தந்திர அடிப்படையில் இது எமக்கு அனுகூலமானதும் அல்ல. அத்துடன் திரு. தொண்டமானின் யோசனையை சிங்கள இராணுவத்தலைமை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதும், எமக்குத் தெரியும், அதற்கான அதிகாரமும் அவரிடம் இல்லை.

## பிரபாகரன் ஏற்கவில்லை

பிரகடனம் செய்யாத போர்நிறுத்த யோசனையை எமது தலைவர் பிரபாகரன் ஏற்றுக் கொள்ளவில்லை. அதுவும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், ஒரு தரப்பில் ஒரு தலைப்பட்சமாக போர்நிறுத்தம் செய்துகொள்வது நடைமுறைச் சாத்தியமில்லை என்று சொன்னார். போர் ஓய்வுக்கு இரு தரப்பும் பரஸ்பரம் இணங்கிக்கொள்ளவேண்டும். அந்தப் போர் நிறுத்தம் அதிகாரபூர்வமாக பகிரங்கமாக பிரகடனம் செய்யப்படவேண்டும் என்பது, பிரபாகரனின் நிலைப்பாடு. திரு. தொண்டமானுக்கு எமது இயக்கத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி பதில் எழுதினோம்.

*2-12-1991* இல் திரு. மகேந்திரராசா அமைச்சர் தொண்டமானுக்கு எழுதிய கடிதத்தில்,

" பிரகடனப்படுத்தப் படாத சண்டையற்ற நிலை நிரந்தரப் போர் நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளீர்கள். கொள்கையளவில் இந்தக் கருத்தை நாம் வரவேற்கிறோம். ஆயினும் நடைமுறையில் இதில் பல சிக்கல்கள் உள்ளன. தமிழ் மண்ணில் தொடர்ந்து இராணுவம் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பொழுது ஒருதலைப்பட்சமாகச் சண்டையை நிறுத்திக் கொள்வது சிரமமானது அல்லவா? அத்தோடு புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்த வேண்டுமென அரசதரப்பில் பகிரங்க அறிவித்தல்கள் விடுக்கப்படுவதும், சமாதானச் சூழலுக்குப் பாதகமாக அமையும்.

சமாதான நல்லெண்ணச் சூழ்நிலை ஏற்படுவதற்கு நாம் எம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம். ஆயினும் அதேவேளை அரச ஆயுதப்படைகளும் இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு அளித்து, பொறுப்புடன் நடந்து கொள்வது சாலச்சிறந்தது. இராணுவ, பொருளாதார அழுத்தங்களைத் தளர்த்தி, சமாதான நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்கி, தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை உண்டுபண்ணும் தார்மீகப் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்திருக்கிறது. புலிகள் இயக்கத்திற்கு நிர்ப்பந்தம் போடுவதாக எண்ணிக் கொண்டு ஒட்டுமொத்தமாகத் தமிழ் இனம் மீது தாங்கொணாப் பளுக்களைச் சுமத்துவது எந்தவகையிலும் நியாயமாகாது என்பதை, நீங்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வீர்கள்.

பிரகடனப்படுத்தப்படாத சண்டையற்ற நிலையிலுள்ள சிக்கல்களைப்பற்றியும், போர் நிறுத்த வழிமுறைகள் பற்றியும், பொருளாதாரத் தடை நீக்கம் சம்பந்தமாகவும் ஆரம்பப் பேச்சுக்களிலேயே நாம் கருத்துப் பரிமாறிக் கொள்வது அவசியம் ...." எனக் குறிப்பிட்டார்.

அமைச்சர் தொண்டமான் ஆரம்பத்தில் எமக்குச் சமர்ப்பித்திருந்த யோசனைகள் முற்போக்கான அம்சங்களைக் கொண்டிருப்பினும், தமிழீழ மக்களின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு முழுமையான தீர்வுத் திட்டமாக அது அமையவில்லை என நாம் சுட்டிக்காட்டியிருந்ததும், அப்படியான ஒரு தீர்வுத் திட்டம் அரசாங்கத்தினதும், எதிர்க் கட்சிகளினதும் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பது அவசியமென நாம் வலியுறுத்தியிருந்ததும், அவருக்கு புதிய நிர்ப்பந்தத்தைக் கொடுத்தது. அதாவது எமதுநியாயமான, தர்க்கரீதியான வேண்டுகோளின்படி அவர் இரண்டு காரியங்களைச் செய்யவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டார்.

ஒன்று, தமிழீழ மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் ஓர் ஆக்கபூர்வமான, முழுமையான தீர்வுத் திட்டத்தை உருவாக்குவது. இரண்டாவது, அத்தீர்வுத் திட்டத்திற்கு ஆளும் கட்சியினதும் எதிர்க் கட்சியினதும் ஆதரவைப் பெறுவது. இந்த இரண்டு காரியங்களையும் செய்து முடிப்பதில் தான் ஈடுபட்டிருப்பதாகவும் அவற்றை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் வருகைதந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களைத் தொடரப் போவதாகவும் திரு. தொண்டமான் எமக்கு அறிவித்தார்.

*6. 12. 1991* இல் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மகேந்திரராசாவுக்கு அவர் எழுதிய கடிதத்தில்,

***"உங்கள் கடிதத்தை மிகவும் கவனமாகப் படித்துள்ளேன். எமது நாட்டில் எல்லா சார்பினரும் ஏற்றுச் செயற்***

படுத்தக் கூடிய தீர்வுக்கேற்ற யோசனைகளை உருவாக்கு வதில் நான் இப்பொழுது ஈடுபட்டுள்ளேன். நான் மாண்பு மிகு ஜனாதிபதி அவர்களுடன் ஆலோசனை நடத்தியபின், எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா அவர்களுடனும், திரு. அனுரா பண்டாரநாயக்கா அவர்களுடனும் கருத்துக்கள் பரிமாறியுள்ளேன். அதைத் தொடர்ந்து திரு. தினேஷ் குணவர்த்தனா, திரு. அஸ்ரப் ஆகியோரின் நிலைப்பாடுகளையும் அறிந்து கொண்டேன். நீங்கள் முன்னர் எடுத்துரைத்த யோசனையின்படி முழு மையானதோர் திட்டத்தை உருவாக்கியுள்ளேன்.

பாராளுமன்றத் தரிவுக்குழுவுக்குச் சமர்ப்பிக்க வேண் டிய யோசனைகள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் கொடுக்கப் படவேண்டும். எனவே எனது திட்டத்தை அடுத்த கிழமை முற்பகுதியில் முன்வைக்க உத்தேசித்துள் ளேன். அத்திட்டத்தை இம்மாதம் 10 ஆம் திகதி உங்களுக்கு அனுப்பி வைப்பேன். உங்களை நேரில் சந்திப்பதற்கு முன் பாராளுமன்ற தெரிவுக்குழு அங்கத்தவர்களோடு கலந் தாலோசித்து, அவர்களின் ஏகோபித்த அனுசரணையைப் பெற விரும்புகிறேன். அந்த நிலைப்பாட்டை அறிந்து கொண்டு. உங்களோடு நடத்தும் பேச்சுவார்த்தையில் எனது திட்டத்தை முழுமையாக உருவாக்கலாம், அத்தோடு அரசாங்கத்தோடு நிறைவேற்ற வேண்டிய தீர்வுக்கு ஏற்ற அடிப்படை நிலைப்பாடுகளையும் வகுத்துக் கொள்ளலாம்.

மேற்கூறியவற்றை எல்லாம் ஆழ்ந்த சிந்தனையோடு செய்வது எமது சமாதான முயற்சிக்கு முக்கியமாகும். எனவே எல்லா ஒழுங்குகளையும் செய்து கொண்டு யாழ்ப் பாணம் வருவதையே நான் விரும்புகிறேன். தைப்பொங் கல் முடிந்தவுடன் வருவதற்கு யோசித்துள்ளேன். இந்த ஏற்பாட்டிற்கு உங்கள் சம்மதத்தை அறிவிக்கவும், அச்சந் தர்ப்பத்தில் உங்கள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபா கரனுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்த இயலுமானால் நாம் ஸ்திரமான நிலைப்பாடுகளை வகுத்துக் கொள்ளலாம்.

அத்தோடு நான் எனது முயற்சியை இங்கே மேமெலெ டுத்துச் செல்வதற்கு எனது கையும் பலப்படுத்தப்படும்'' என திரு தொண்டமான் குறிப்பிட்டிருந்தார்.

பேச்சுவார்த்தைகளுக்கு முன்னோடியாக ஓர் அமைதி நிலையைத் தோற்றுவிக்கும் அவசியம் பற்றியும் பொருளாதாரத் தடைகளை நீக்குவதன் தேவை பற்றியும் விடுதலைப் புலிகள் வலியுறுத்திய போதும், திரு. தொண்டமான். அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இதுபற்றி திரு. தொண்டமான் பிரேமதாசாவுடன் பேசியதாக அறிந்தோம். எனினும் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது திணித்த இராணுவ, பொருளாதார அழுத்தங்களைத் தளர்த்த விரும்பவில்லை. இன்னொரு விதத்தில் சொல்லப் போனால், புலிகள் – தொண்டமான் பேச்சுக்கு வழிவகுத்துக் கொடுக்கும் சுமுக புறநிலையை உருவாக்கிக் கொடுக்க அரசாங்கம் விரும்பவில்லை எனவே இந்தப் பிரச்சினையை முதன்மைப்படுத்தாமல், அதனைத் தட்டிக் கழிக்கும் தோரணையில், அரசியல் தீர்வு ஏற்பட்ட பின்னர் அது தானாகவே தீர்ந்துவிடும் என திரு. தொண்டமான் கருத்துத் தெரிவித்தார்.

*''பேச்சுவார்த்தைக்கு வேண்டிய சுமுகமான சூழ்நிலை, பொருளாதாரத் தடையை நீக்குதல் ஆகியனவற்றைக் குறிப்பிட்டிருந்தீர்கள். அரசியல் தீர்வு நிறைவு பெறும் பொழுது இவை தாமாகவே நீங்கும் என்பதே எனது கருத்து.''*

எனத் திரு. தொண்டமான் இக்கடிதத்தில் குறிப்பிட்டார்.

## இந்திய நிலைப்பாடு

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் அமைச்சர் தொண்டமான் ஒரு சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்பதும், யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்

புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்களை நடத்தப் போகிறார் என்பதும் கொழும்பு, வெளிநாட்டுப் பத்திரிகைகள் மூலம் பிரபல்யமாகத் தொடங்கிற்று - மெல்ல மெல்ல இந்தியாவினதும், சர்வதேச சமூகத்தினதும் கவனம் தொண்டமானின் முயற்சிகள் மீது திரும்பியது.

இதற்கிடையில் திரு. தொண்டமான் இந்தியாவுக்கு ஒரு சுற்றுலா விஜயத்தை மேற்கொண்டபோது, புதுடில்லியில் இந்தியத்தலைவர்களைச் சந்தித்து தனது சமாதான முயற்சி பற்றி விளக்கியிருக்கிறார்- இந்தியாவில் என்னபேசப்பட்டது என்ற விபரம் எமக்குத் தெரியாது. திரு. தொண்டமானும் அதுபற்றி எமக்கு எழுதவில்லை. இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் பேசியபொழுது அவர் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் என்று மட்டும், திரு. தொண்டமான் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

திரு. தொண்டமானின் முயற்சியை இந்திய அரசு உற்சாகமாக வரவேற்கவில்லை என்பதையே திரு. நரசிம்மராவின் மௌனம் தெளிவாக எடுத்துக் காட்டியது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் குறுகிய வரையறைக்குள் திரு தொண்டமான் தனது அரசியல் காய்களை நகர்த்தவில்லை என்பது, இந்திய அரசுக்குப் புரிந்தது. அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமிழ்நாட்டிலிருந்து ஒழித்துக் கட்டவும் புலிகளுக்குச் சர்வதேச ரீதியாகக் களங்கத்தை ஏற்படுத்திவிடவும் இந்திய அரசு பகீரதப் பிரயத்தனம் செய்துவரும் வேளையில், தமிழீழ மக்களின்

உண்மையான பிரதிநிதியாக புலிகள் இயக்கத்தை அங்கீகரித்து, இந்திய — இலங்கை உடன்பாட்டு எல்லைக்கு அப்பால் புலிகளுடன் சமரசம் செய்துகொள்ள திரு. தொண்டமான் எடுத்து வரும் முயற்சி, இந்தியாவுக்கு மகிழ்ச்சியை அளிக்குமென எதிர்பார்க்க முடியாது. தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினையில் இந்தியாவின் மத்தியஸ்துவமோ, தலையீடோ அவசியமில்லை என்றும் இந்திய சமஷ்டி முறை உருப்படியான மாநில சுயாட்சி அமைப்பு அல்லவென்றும் திரு. தொண்டமான் பத்திரிகைப் பேட்டிகளில் குறிப்பிட்டதும் இந்திய அரசுக்குச் சினத்தை ஏற்படுத்தியிருக்கலாம். எனினும் திரு. தொண்டமான் ஒரு சக்திவாய்ந்த அரசியல்வாதி என்பதாலும், மலையகத் தமிழரின் மதிப்புமிக்க தலைவர் என்பதாலும், அவருடன் முரண்படவோ அல்லது பகைத்துக்கொள்ளவோ இந்திய அரசு விரும்பப்போவதில்லை. ஆதலால் தனது அதிருப்தியை ராஜதந்திரப் பண்புடன் மௌனத் திரைக்குள் மறைத்திருக்கலாம்.

விடுதலைப் புலிகளுக்கு எழுதியபடி திரு. தொண்டமான் கொழும்பில் சிங்கள அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசி, ஒரு தீர்வுத்திட்டத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். சகல தரப்பினருடனும் கதைத்து அவர்களது கருத்தைக் கேட்டு, அவற்றின் அடிப்படையிலேயே ஒரு தீர்வுத் திட்டத்தை வகுத்துள்ளதாக திரு. தொண்டமான் எமக்கு அறிவித்தார்.

## பிரபாகரனுக்கு தொண்டா கடிதம்

டிசம்பர் 10 ஆம் திகதி திரு. தொண்டமான் தனது தீர்வுத் திட்டத்தை எமக்கு அனுப்பிவைத்

தார். இந்தத் தீர்வுத்திட்டத்தின் பிரதிகள் எமது இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனுக்கும், பிரதித் தலைவர் திரு. மகேந்திரராசாவுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக அனுப்பிவைக்கப்பட்டது. இத்திட்டத்தை, ஜனாதிபதிக்கும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கும் சமர்ப்பித்திருப்பதாகவும் திரு. தொண்டமான் எமக்கு அறியத்தந்தார்.

10-12-1992 இல் தனது தீர்வுத்திட்டத்தோடு தலைவர் பிரபாகரனுக்கு திரு. தொண்டமான் அனுப்பிவைத்த கடிதத்தில்,

*''நான் மாண்புமிகு ஜனாதிபதியுடனும், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும், வேறு கட்சித் தலைவர்களுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் ஒரு திட்டத்தை வகுத்துள்ளேன். இத்திட்டம் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும், சமாதானத்திற்கு ஏதுவாகிய சூழ்நிலையை ஏற்படுத்தவும் உதவி செய்யும் என்பது எனது நம்பிக்கை. இத்திட்டத்தையே நான் இன்று பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பித்துள்ளேன். அதனை மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும் இன்று கையளித்துள்ளேன். இத்திட்டத்தை உங்களுக்கு அனுப்பிவைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எம்மிடையே நேரடிச் சந்திப்பொன்றை நான் எதிர்பார்க்கிறேன். அச்சந்திப்பின் போது அரசியல் தீர்வுக்கு வேண்டிய நிலைப்பாடுகளை ஆராய்வது அவசியமாகும். அத்தோடு செயல் முறைக்கு உதவக்கூடிய திட்டமொன்றையும் முழுமையாக உருவாக்குதல் வேண்டும்.*

*போரற்ற சூழ்நிலையை ஏற்படுத்துதல், பொருளாதாரத் தடையை நீக்குதல் ஆகிய யோசனைகள் வேறாக ஆராயப்படும். அதேசமயத்தில் தமிழ்மக்களின் இக்கட்டான நிலைமைக்கு மூலகாரணியாகிய அரசியற் பிரச்சினையை ஆராய்வது அதிமுக்கியமாகும். நிரந்தரத் தீர்வுக்கு ஏற்ற*

*அனுகு முறைகளை வகுத்தலும் அத்தியாவசியம். எமது சந்திப்புக்கு முன்னதாகவே உங்களது யோசனைகளைப் பரிமாறுவது வரவேற்கத்தக்கதாகும்.*

*எமது சமாதான முயற்சி கைகூடும் என்ற நல்லெண்ணத்தோடு இக் கடிதத்தை அனுப்புகிறேன்"*

என்று குறிப்பிட்டார்.

திரு. தொண்டமான் அனுப்பி வைத்த தீர்வுத்திட்டத்தை எமது தலைமைப் பீடம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது. அதேசமயம் நாம் உள்ளூர்ப் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி திரு.தொண்டமானின் தீர்வுத் திட்டத்தைப் பொதுமக்களின் பரிசீலனைக்காகவும் விவாதத்திற்காகவும் பகிரங்கப்படுத்தினோம். இதேபோல திரு. தொண்டமானும் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தனது திட்டத்தை வெளியிட்டார்.

இத்தீர்வுத் திட்டத்தை எமது இயக்கம் ஆர்வத்துடன் பரிசீலனை செய்வதாகத் தெரிவித்து திரு. மகேந்திரராசா திரு தொண்டமானுக்கு ஒரு பதிலை அனுப்பி வைத்தார். இத்தீர்வுத் திட்டம் பற்றி நேரில் கலந்துரையாட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டார்.

*20- 12- 91* இல் திரு. மகேந்திரராசா அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில்,

**"உங்களது 10-12-1991 திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது. தேசியப் பிரச்சினை சம்பந்தமாக நீங்கள் அனுப்பிவைத்த தீர்வுத் திட்டத்தையும் பெற்றுக் கொண்டோம். மிகவும் நன்றி. உங்களது தீர்வுத் திட்டத்தை எமது இயக்கம் மிகவும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் பரிசிலனை செய்து வருகிறது.**

நீங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தைப் பொங்கலோடு உங்களை யாழ்ப்பாணத்தில் சந்திப்ப தற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

உங்கள் தீர்வுத் திட்டம் பற்றி நேரில் கலந்துரை யாடுவோம்" என்று குறிப்பிட்டார்.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத் தில் முற்போக்கான ஆக்க பூர்வமான பல யோசனைகள் அடங்கியிருந்தன. ஆனால் அதே சமயம் பல குறைபாடுகளும் உள்ளன. தமிழ் மாநில சுயாட்சிக்கான ஆட்சியதிகாரங்கள் திட்ட வட்டமாக வரையறுக்கப்படவில்லை. சட்ட வாக்க நிறைவேற்று அதிகாரங்கள் தெளிவாக வகுக்கப் படவில்லை. அத்தோடு மத்திய, மாநில அரசுக ளின் உறவு, செயற்பாடு, அதிகாரப் பகிர்வு ஆகி யன செம்மையாக நெறிப்படுத்தப்படவில்லை. ஒட்டுமொத்தத்தில், இத்திட்டமானது ஒரு முழுமையான தன்னாட்சியமைப்பு வடிவத்தினைக் கொண்டிருக்கவில்லை. சதையும் இரத்தமும் அற்ற வெறும் எலும்புக்கூடாகவே இத் தீர்வுத் திட்டம் வரையப்பட்டிருந்தது. ஆயினும் பிரதேச சுயாட்சிக்கான சாராம்ச அடிப்படைக் கூறுகளை இத் திட்டம் உள்ளடக்கியிருந்தது என்பதை நாம் மறுக்க முடியாது.

இந்தத் திட்டத்தைத் தற்காலிகமாக சுயாட் சிக்கான அமைப்பு எனப் பெயரிடலாம் என்கிறார் திரு. தொண்டமான். ஆயினும் வேண்டுமென் றால், மாகாணசபை, பிரதேசசபை, மாநிலசபை, மாநில அரசு, வலயசபை போன்ற வேறு பதங்க ளையும் பாவிக்கலாம் என்கிறார்.

வட - கிழக்கில் வாழும் மக்கள் தமது அபிலாசைகளைப் போதுமான அளவு பூர்த்தி செய்து கொள்ளும் வகையில், தாராளமான ஆட்சியதிகாரங்கள் கொண்ட உண்மையான சுயாட்சியமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்றும், அதற்கான அரசியல் யாப்புத் திருத்தங்களையும் சட்டவாக்கியங்களையும் அரசு செய்து கொடுக்க வேண்டுமெனவும் இத் திட்டத்தின் அறிமுக முன்னுரையிலேயே வலியுறுத்தப்படுகின்றது. பழைய மாகாண சபைத் திட்டம் அதிகார வறுமையால் செயலிழந்து போன வரலாற்றைக் குறிப்பிட்டு தமிழ் மக்களுக்குப் பூரணமான சுயாட்சி அதிகாரம் வழங்குவதன்மூலமே நாடு சிதறுண்டு போவதைத் தடுக்கலாமெனவும் இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தமிழீழ மக்களுக்கு அர்த்தமுள்ள, உருப்படியான சுயாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதைத் திரு. தொண்டமான் வலியுறுத்திய போதும், இச் சுயாட்சித் திட்டத்தை ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் ஆதிக்க எல்லைக்குள் உட்படுத்தியிருக்கிறார் என்பதை, நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஐக்கியம், நில ஒருமைப்பாடு, இறைமை என்ற கோட்பாடுகளைத் திரிபுபடுத்தி முழு இலங்கையையும் சிங்கள தேசமாக வரையறுத்து பெரும்பான்மையினர் எதேச்சாதிகாரத்திற்கு வலுவூட்டி, இறுக்கமான சட்டக்காப்பரண்கள் கொண்ட கோட்டையாகத் திகழும் ஒற்றையாட்சி யாப்பின் கீழ் முழுமையான ஒரு பிரதேச சுயாட்சித் திட்டத்தை உருவாக்குவது கடினம். நீண்டகால அரசியல் அனுபவமுள்ள அரசியல்வாதியான திரு. தொண்டமானுக்கு இது

தெரியாததல்ல. அரசியல் அமைப்பை அடிப்படையில் மாற்றியமைக்காமல் பூரண சுயாட்சி சாத்தியமாகாது என்பது அவருக்குத் தெரியாதது அல்ல. பிரதேச சுயாட்சியை வலியுறுத்தி திரு. தொண்டமான் முன்வைத்த யோசனைகள் கருத்தளவில் கவர்ச்சிகரமானதாக, முற்போக்கானதாகத் தோன்றியபோதும் நடைமுறையில் பல சிக்கல்களைக் கொண்டிருந்தது. இதை நன்கு உணர்ந்துதான் அதிகார முதலீடு சம்பந்தப்பட்ட அதிமுக்கிய விடயங்களை அவர் வெற்றிடமாகவும் பூடகமாகவும் விட்டுவைத்துள்ளார்.

## தமிழர் தாயகம்

தமிழர் தாயகம் என்ற சொற்பதம் பாவிக்கப்படாதபோதும், பிரிக்கப்படாத, தற்போதைய பூகோள எல்லைகளைக் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழரின் தாயகபூமி என்பது திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வட - கிழக்கு இணையப்பெற்ற தமிழர் மாநிலத்திற்கான சுயாட்சி அமைப்பையே திரு. தொண்டமான் பரிந்துரைக்கிறார். பண்டா — செல்வா ஒப்பந்தத்திலிருந்து ராஜீவ் - ஜே. ஆர். உடன்பாடுவரை தெரிவிக்கப்பட்ட யோசனைகளுடன் ஒப்புநோக்கிப் பார்க்கும் பொழுது, இது முற்போக்கானது என்று சொல்லலாம். எனினும் பண்டா —செல்வா ஒப்பந்தத்தில் முன்னுரிமை கொடுக்கப்படும் சிங்களக் குடியேற்றப் பிரச்சினை பற்றியும், இதனால் இதுவரைகாலமும் பறிபோன தமிழர் பிரதேசம் பற்றியும் எதுவும் குறிப்பிடப்படாதது, இந்த யோசனையில் பொதிந்திருக்கும் ஒரு பெரிய குறைபா

டாகும். தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துநிற்கும் சிங்களக் குடியேற்றங்களை நிலையானதாக அங்கீ கரித்து, சிங்களக் குடியேற்றவாசிகளின் நலன் பேணும் பொறுப்பு நடுவன் அரசுக்கு விடப்பட்டி ருக்கிறது. இனப்பிரச்சினைக்கு அடிப்படையான தும், மூலகாரணிகளில் முக்கியமானதுமான குடி யேற்றப் பிரச்சினை இத் திட்டத்தில் சரியான முறையில் அணுகப்படவில்லை.

ராஜீவ் - ஜே. ஆர். உடன்பாடு தமிழரின் வர லாற்றுத் தாயகத்தை முழுமையாக அங்கீகரிக் காது, நில ஒருமைப்பாட்டைப் பிரச்சினைக்கு உள் ளாக்கியது. வட - கிழக்கு இணைப்பைச் சர்வசன வாக்கெடுப்பிற்கு உள்ளாக்கியதால் இந்தச் சிக்கல் எழுந்தது. ஆனால் தொண்டமானின் திட்டம் பூகோளத் தொடர்புடைய பிரிக்கப்படாத தமி ழர் தாயகப் பிரதேசத்தை ஏற்றுக்கொள்வ தென்பது ஆக்கபூர்வமானதுதான்.

## நிலவுரிமை

வட—கிழக்குப் பிரதேசத்திலுள்ள அரசகாணி கள் சுயாட்சி அமைப்பின் ஆட்சியதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பது திரு. தொண்ட மானின் திட்டத்தில் ஒரு வரவேற்கத்தக்க அம்சம். அரச காணிகளை நிர்வகிக்கும், கட்டுப்படுத்தும், பயன்படுத்தும் அதிகாரம் சுயாட்சி அமைப்பிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இலங்கை சுதந்திர மடைந்த காலத்திலிருந்த இன விகிதாசாரத்திற்கு ஏற்ற முறையில் குடியேற்றத்திற்கான நிலப் பங்கீடு அளிக்கப்பட வேண்டும் என இத்திட்டம் பரிந்துரைப்பதும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

முதலமைச்சர், அமைச்சர் குழு, பிரதேச அவை பற்றி மேலெழுந்தவாரியாக இத்திட்டத்தில் குறிப்பிடப்படுகிறதே தவிர இந்தப் பொறுப்புகளுக்கான நிறைவேற்று அதிகாரம் பற்றியோ, பிரதேச அவையின் சட்டவாக்க அதிகாரம் பற்றியோ தெளிவாக எதுவும் வரையறுக்கப்படவில்லை. ஜனாதிபதி, மத்திய அமைச்சரவை, பாராளுமன்றம் போன்ற நடுவன் அரசு நிறுவனங்களுக்கும் பிரதேச ஆட்சி நிறுவனங்களுக்கும் மத்தியிலான அதிகாரப் பகிர்வுகளும் தெளிவாக்கப்படவில்லை. பிரதேச வரம்பிற்குள் கொண்டு வரப்படும் துறைகளுக்கும் அவற்றின் செயற்பாடுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும் அதிகாரத்தின் அளவிற்கு ஏற்ற முறையில் சுயாட்சியதிகாரம் நிர்ணயிக்கப்படுமென தெளிவற்ற வரைவிலக்கணம் மட்டுமே கொடுக்கப்படுகிறது.

அதிகாரப் பரவலாக்கத்தைப் பயனுள்ளதாக, அர்த்தமுடையதாகச் செய்வதற்கு அரசியல் அமைப்பில் திருத்தம் செய்து 13 ஆவது திருத்தச் சட்டம் பகரும் மாகாண நிரல் அரசுக்கு தடுக்கப்பட்ட நிரல், பொது நிரல் ஆகியன மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் தொண்டமான் ஆலோசனை கூறுகிறார். இதன்படி பொது நிரல் என்பது முற்றாக நீக்கப்பட்டு அதிலுள்ள விடயங்களும் கருமங்களும் ஏனைய இரு நிரல்களுக்கு இத் திட்டத்தில் பங்கிடப்பட்டிருக்கிறது. இது ஒரு ஆக்கபூர்வமான யோசனை. இதன் நிமித்தம் பொது நிரலிலுள்ள பல முக்கிய விடயங்கள் பிரதேச ஆட்சியமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. குறிப்பாக துறைமுகங்களைச்

சொல்லலாம். திருக்கோணமலைத் துறைமுகம் உட்பட வடக்குக் கிழக்கு எல்லையோரமுள்ள துறைமுகங்களும் அவற்றின் நிர்வாகமும் பிரதேச ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

பொலிஸ் நிர்வாகம் பிரதேச சுயாட்சி அமைப்பிற்குக் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதும் திரு. தொண்டமானின் திட்டத்திலுள்ள ஆக்க பூர்வமான ஒரு அம்சமாகும். வட - கிழக்கு மாகாணத்திற்கான காவற்படையை உருவாக்குவதற்கான முழு அதிகாரமும் பிரதேச அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பொலிஸ் மா அதிபர், உதவி பொலிஸ் மா அதிபரிலிருந்து சகல மேலதிகாரிகளையும் ஏனைய தரத்தினரையும் கொண்டதாக பிரதேச காவற்படை பிரதேச இன விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும். காவற்துறையினரின் நியமனம். இட மாற்றம், பதவி நீக்கம், ஒழுங்காற்றுக் கட்டுப்பாடு ஆகியன மாநில அரசினால் மேற்கொள்ளப்படும். உடனடியாக ஆரம்ப ஆட்சேர்ப்புக்கு 10,000 காவற்துறையினரை பணியில் ஈடுபடுத்தலாமென தொண்டமான் யோசனை தெரிவித்திருக்கிறார்.

மாநில பொலிஸ் மா அதிபர் மாநில முதலமைச்சருக்குப் பொறுப்பாளராகவும் அவரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிபவராகவும் இருப்பார். இந்த யோசனைகள் மாநில பொலிஸ் படையை மாநில சுயாட்சி அமைப்பின் அதிகார வரம்பிற்குள் உட்படுத்துகிறது.

மாநில பொருளாதார திட்டமிடுதல், மாநில அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட துறைகளிலும் சில முற்போக்கான யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, மாநில அபிவிருத்தித் திட்டங்களுக்கு, மத்திய அரசின் குறுக்கீடு இன்றி நேரடியாக வெளிநாட்டு உதவியைப் பேசிப் பெறும் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

யாப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் அரசுக்கு ஒதுக்கப்பட்ட நிரல், பொது நிரல் ஆகியனவற்றிலிருந்து சில விடயங்கள் மாநில சுயாட்சி அமைப்பிற்கு மாற்றம் செய்யப்பட்டு மொத்தம் 36 துறைகள் மாநில நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. நிலவுரிமை, சட்டம் ஒழுங்கு, பொருளாதார திட்டமிடல், நிதி ஒதுக்கீடு, பொதுப்பணி, நீர்ப்பாசனம், விவசாயம், மீன்பிடி, கல்வி, உயர்கல்வி, சுகாதாரசேவை, நிவாரணம் புனர்வாழ்வு, சக்தி, துறைமுகம், வீடமைப்பு, நெடுஞ்சாலைப் போக்குவரத்து, கடல்வழி கப்பற் போக்குவரத்து, பிரதேச கடல் எல்லைக்கு அப்பால் மீன்பிடித்தல் ஆகியன உட்பட்ட விடயங்களும் கருமங்களும் மாநில நிர்வாக ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பது தொண்டமானின் திட்டத்தினது ஒரு சிறப்பம்சமாகும்.

வட—கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் திரு தொண்டமான் சில யோசனைகளை இத் திட்டத்தில் முன் வைத்திருக்கிறார். தமிழர் மாநிலத்தில் வதியும் சிறுபான்மையினருக்கு

121, POINT
NALLUR, JAFFNA

அரசியல் யாப்புரீதியாக பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தியிருக்கிறார். நிலம், சட்டம் ஒழுங்கு, நிதி, கல்வி, பண்பாடு, விவசாயம், மீன் பிடி, கைத்தொழில், வணிகம் போன்ற விடயங்களில் உரிமைகள், காப்புகள் வழங்கும் அரசியல் நிர்வாக ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமெனவும் ஆலோசனை கூறுகிறார். முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் பிரதேச சபைகளாகப் பிரிக்கப்பட்டு, அவை பிரதேச சபைகள் ஒன்றியமாக இணைக்கப்பட்டு, மாநில சுயாட்சியமைப்பின் ஒரு அலகாகச் செயற்படலாம் எனவும் திரு. தொண்டமான் யோசனை தெரிவிக்கிறார்.

அமைச்சர் தொண்டமானின் யோசனைகள் பற்றி இங்கு மிகவும் சுருக்கமாகப் பார்த்தோம். அவரின் தீர்வுத் திட்டத்தை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்து ஒரு முழுமையான ஆய்வு செய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. இத்திட்டத்திலுள்ள ஆக்க பூர்வமான அம்சங்களையும் குறைபாடுகளையும், வெற்றிடங்களையும், தெளிவற்ற தன்மைகளையும் சுட்டிக் காட்டுவதோடு, ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் எல்லைக்குள் வகுக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான சுயாட்சி முறை இது என்பதை எடுத்துக் காட்டுவதே எமது நோக்கம். இது பூரணப்படுத்தப்படாத திட்டம் என்பதையும், 'வட-கிழக்குப் பிரதேசத்தை நிர்வகிக்கும் சில நிறுவனங்களின் மேலோட்ட ஆய்வு' மட்டும் இதில் தரப்படுவதாகவும் திரு. தொண்டமானே ஒப்புக்கொள்கிறார். அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு அவர் எழுதிய கடிதத்தில் தமது தீர்வுத் திட்டத்தை மேலும்

செழுமைப்படுத்தி பூரணப்படுத்தும் வகையில் பேச்சுவார்த்தைகள் அமையலாம் என்றார்.

திரு தொண்டமானின் தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் நிராகரித்து விடவில்லை. அமைச்சர் யாழ்ப்பாணம் வரும்பொழுது இத்திட்டத்தில் உள்ள பிரச்சினைகள் பற்றி நேரில் கலந்துரையாடலாம் என எண்ணினோம். இதன்படி அவருக்கு சாதகமான பதிலை அனுப்பி வைத்தோம்.

இதற்கிடையில், திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டம் தென்னிலங்கையில் மிகப்பெரிய சர்ச்சையைக் கிளப்பி விட்டது. அரசியல்வாதிகள். மதவாதிகள், தொழிற்சங்கவாதிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் மத்தியில் தொண்டமானின் திட்டத்திற்குப் பலத்த எதிர்ப்பு எழுந்தது. சிங்கள - பௌத்த பேரினவாதம் வெறிகொண்டெழுந்து கோரத் தாண்டவம் ஆடியது. சிறீலங்கா அரசியல் அரங்கில் மீண்டும் தமிழர் துவேசம் எழுந்து தனது அசிங்கமான முகத்தைக் காட்டியது. இந்தப் பேரினவாத எழுச்சிக்கு பௌத்த பீடம் தலைமை தாங்கியது. திரு. தொண்டமான் மிகவும் சந்தேகத்திற்குரிய, மிகவும் சர்ச்சைக்குரிய அரசியல் வாதியாக மட்டுமன்றி, சிங்கள தேசத்தின் துரோகியாகவும் கணிக்கப்பட்டார்.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் வட - கிழக்கு மாகாணங்கள் தமிழரின் வரலாற்றுத் தாயகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையே தென்னிலங்கைப் பேரினவாதிகள் மத்தி

யில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியது. தமிழருக்கென தனித்துவமான தாயகம் இருக்கவில்லை என்றும், முழு இலங்கைத் தீவுமே பௌத்த பூமி எனவும், 'தாயகம்' என்ற கோட்பாடு தனியரசின் மாற்றுவடிவம் எனவும் சித்தாந்த மாயையில் சிக்குப்பட்டிருந்த இனவாதிகளுக்கு தொண்டமானின் இந்த யோசனையை ஜீரணிக்க முடியவில்லை. வடக்கிலிருந்து கிழக்கைப் பிரித்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் தென் தமிழீழத்தைப் படிப்படியாக விழுங்கி விடலாம் என நம்பியிருக்கும் பேரினவாதிகளுக்கு, வட-கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைந்த தமிழர் மாநிலம் என்றும் அந்த மாநிலத்திற்குத் தன்னாட்சி அதிகாரமும் வேண்டி நிற்கும் தொண்டமானின் யோசனை ஆவேசத்தை மூட்டியது.

வட-கிழக்கு மாகாணத்தின் நில உடைமைப் பாட்டு உரிமை, அரச காணிகள் மீதான ஆட்சியுரிமை, சுதந்திர காலத்தின் இன விகிதாசார அடிப்படையில் குடியேற்றத்திற்கு நிலம் பங்கீடு செய்யும் அதிகாரம் போன்ற யோசனைகளும் சிங்கள இனவாதிகள் மத்தியில் எதிர்ப்பைக் கிளப்பி விட்டிருக்கின்றன. இலங்கைத் தீவின் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பை திரு. தொண்டமான் தமிழருக்குத் தானமாக வழங்கிவிட்டார் என அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

திருக்கோணமலைத் துறைமுகம் சுயாட்சி அமைப்பின் நிர்வாக அதிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டதும் சிங்கள இனவாதிகளுக்குப் பெரும் சினத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழீழத்தின்

துறைமுகங்கள் மட்டுமல்லாது கடல்வழிக் கப்பற் போக்குவரத்து, பிரதேச எல்லைக்கு அப்பால் மீன் பிடித்தல் போன்ற விடயங்களும் தமிழரின் ஆட்சியதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப் பட்டிருப்பதும் பெரும் சர்ச்சையை உண்டுபண்ணியுள்ளது. இலங்கைத் தீவின் 60 விகிதமான கடல் எல்லையையும் அதற்கு அப்பாலான ஆழ்கடலையும் தமிழரின் ஆட்சிப் பீடத்திற்கு ஒப்படைத்துவிட்டார் எனவும் அமைச்சர் தொண்டமான் மீது பழி சுமத்தப்பட்டது.

ஒட்டுமொத்தத்தில் திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டம் தமிழீழத் தனியரசுக்கான அத்திவாரமாக அமையப்பெற்றிருக்கிறது என்பதே சிங்கள இனவாத சக்திகளின், குறிப்பாகச் சிங்கள பௌத்த பீடத்தின் வாதமாகும். இது நாட்டைத் துண்டாடும் நோக்கத்தைக் கொண்ட ஒரு நாசகாரத் திட்டம்; இலங்கையின் ஒற்றுமைக்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் குந்தகம் விளைவிக்கும் ஒரு ஆபத்தான திட்டம்; வட-கிழக்கில் சிங்கள அரச நிர்வாகத்திற்கு சாவுமணி அடிக்கும் ஒரு சதித்திட்டம் என்றெல்லாம், தொண்டமானின் திட்டத்திற்கு எதிராக இனவாதப் பேய்கள் கூச்சல் எழுப்பின. இந்தத் திட்டம் ஏற்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டால், சொற்ப காலத்தில் தமிழர்கள் ஒருதலைப்பட்சமாகச் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து தனியரசை அமைத்துக் கொள்ள முடியும் எனவும், ஒரு சிங்கள இனவாத அமைப்பு அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சிங்கள இனவாத எழுச்சி இயக்கம் திரு. தொண்டமானை தமிழன் என்ற வகையில் இனங்கண்டு மிகமோசமாகச் சாடியது. சிங்கள இனத்தின் விரோதி என்றும். சதிகாரன் என்றும், பிரபாகரனின் ஆவி என்றும் திட்டியது.

புத்தபெருமான் காருண்ணியத்தைப் போதித்தார். கொல்லாமையைப் போதித்தார். அன்பையும் அறத்தையும் தர்மத்தையும் போதித்தார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்து மத ஞானியாகிய புத்தரின் போதனைகள் சிங்கள தேசத்தின் வேதமாக மாறியது. அரசமரம் அங்கு வேர்விட்டு வளர்ந்தது. புனித மதமாக பௌத்தம் அங்கு நிலை கொண்டது.

மனுநீதியின் தத்துவப் பொக்கிஷமான பௌத்த மதத்தில் காலப்போக்கில் பேரினவாத விஷம் கலக்கப்பட்டது. மகாவம்ச காலத்திலிருந்தே தமிழ்த் துவேசம் சிங்கள பௌத்த வரலாற்று ஏடுகளில் புகுத்தப்பட்டது. புத்தரின் அறநெறித் தத்துவங்களுக்கு வியாக்கியானம் செய்ய விழைந்த மத குருக்கள், அதில் புராணக் கதைகளைப் புகுத்தினர். இனவாதக் கருத்துருவங்களைத் திணித்தனர். தமிழர் விரோத எண்ணங்களைக் கற்பித்தனர்.

இலங்கைத்தீவு பௌத்தத்திற்கெனப் படைக்கப்பட்ட புனித பூமி; சிங்களவரின் தாயகம். தமிழர்கள் அந்நியர்கள்; சிங்களவரின் புனித பூமியை ஆக்கிரமித்து நிற்பவர்கள். சிங்களவர்கள் அதியுயர்ந்த ஆரிய குலத்தவர்; தமிழர்கள் தாழ்ந்த

திராவிடர்கள். சிங்களவர்கள் நாகரிகமானவர்கள்; தமிழர்கள் காட்டுமிராண்டிகள். சிங்களவர்கள் ஆளப்பிறந்தவர்கள்; தமிழர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள். இப்படியான சிங்களப் பேரினவாதக் கருத்துக்கள் பௌத்த வேதாகமங்களில் புகுத்தப்பட்டன. பௌத்தம் சிங்களப் பேரினவாதத்துடன் கலந்து களங்கமடைந்தது. புத்தரின் தர்மக் கோவிலுக்குள் அதர்மப் பிசாசு புகுந்து கொண்டது.

காலனித்துவ சகாப்தத்தில், குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சிங்கள - பௌத்த பேரினவாதம் அரசியற் களத்தில் பிரவேசித்தது. பிரித்தானிய ஏகாதிபத்தியப் பூதமும், திராவிடக் காட்டுமிராண்டிகளுமாகச் சேர்ந்து சிங்கள இனத்தை அடக்கி ஆளுவதாகக் குரல் எழுப்பியது. அந்நியரின் ஆதிக்கத்தால் சிங்களவரின் புனித பூமி அழுக்குப்படிந்துவிட்டதாக ஆத்திரப்பட்டது.

ஆங்கிலேயரின் வெளியேற்றத்தின் பின் இலங்கையின் அரசியல் வாழ்வை ஆட்டிப்படைக்கும் ஆதிக்க சக்தியாக சிங்களப் பேரினவாதம் வளர்ச்சி கண்டது. மதபீடங்களிலிருந்து கல்விக் கூடங்களிலும் கட்சி அரசியலிலும் ஊடுருவி வளர்ந்தது. சிந்தனையரங்கிலிருந்து- சித்தாந்த உலகிலிருந்து திண்ணியமான நிறுவனமயம் பெற்றது. சிங்களப் பேரினவாதத்தின் பேயுருவங்களாக அரசியல் அமைப்புள் வடிவம் எடுத்தன. அரசியல்வாதிகளும் இனவாதத்தால் ஆட்டப்படும் பொம்மைகளாக மாறினர்.

சிங்கள இனவாதத்தின் பேரெழுச்சி தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையை வலுப்படுத்தியது. சிங்கள தமிழ்த் தேசிய இனங்கள் மத்தியில் முரண்

பாட்டை முற்றச் செய்தது. தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை முனைப்புறச் செய்தது.

தமிழீழ மக்களின் அரசியற் போராட்ட வரலாற்றில், காலத்திற்குக் காலம் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் காணப்பட்டபோது, சிங்கள - பௌத்த பேரினவாதம் தலைதூக்கி அதற்கெல்லாம் ஆப்பு வைத்து விடுவது தொடர்ந்து நடைபெறும் சரித்திர நிகழ்வு. பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து தொண்டமானின் சமரச முயற்சிவரை, சிங்களப் பேரினவாதம் இந்தக் காரியத்தைத் தவறாது செய்துவருகிறது. எனவே இந்தக் கசப்பான வரலாற்று அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட எமது மக்களுக்கு, இன்று தென்னிலங்கையில் தலைவிரித்தாடும் இனவாதம் ஆச்சரியத்தைக் கொடுக்கப் போவதில்லை.

திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டம் பகிரங்கப்படுத்தப்பட்டதுமே சிங்கள-பௌத்த பீடம் போர்க் கொடியை உயர்த்தியது. சிங்கள இனவாத சக்திகள் தமிழ்த் துவேசத்தைக் கக்கின. சிங்கள அரசியல்வாதிகள் கூச்சல் போட்டனர்.

ஜனாதிபதி பிரேமதாசா, திருமதி பண்டாரநாயக்கா, அனுரா, தினேஷ் குணவர்த்தனா மற்றும் ஆளும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து, கருத்துப் பரிமாறி அவர்களது ஆலோசனை கேட்டு, அனுசரணையைப் பெற்று, எல்லோரது கருத்து ஒத்திசைவுக்கு ஏற்ப இந்தத்

தீர்வுத் திட்டத்தை உருவாக்குவதாக திரு. தொண்டமான் எமக்கு எழுதியிருந்தார். அப்படியிருந்தும் அவர் வகுத்த திட்டத்திற்குச் சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து இத்தகைய கடும் எதிர்ப்பு எழுந்தது ஏன்?

தமிழரின் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு திரு. தொண்டமான் தமிழீழத் தனியரசைப் பரிந்துரைக்கவில்லை. ஒற்றையாட்சியை மாற்றியமைக்க வேண்டுமெனக் கேட்கவில்லை. சமஷ்டி அமைப்பைத்தானும் கோரவில்லை. யுகம் யுகமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த வரலாற்றுப் பிரதேசத்தில் அவர்களுக்கு ஓரளவு சுயாட்சியுரிமை கொடுபட வேண்டும் என்ற கருத்தில், ஒரு தீர்வுத்திட்டத்தை முன் வைத்தார். இதற்குத்தான் இத்தகைய எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

பௌத்த மதபீடம் போர்க்கொடி உயர்த்தி விட்டது. அதனால் தாங்களும் அந்தப் போர்க்களத்தில் குதித்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சிகளும் திரு. தொண்டமானின் திட்டத்தை எதிர்க்கவில்லை. தமிழரின் இரத்தத்தில் வேரூன்றி வளர்ந்த பேரினவாதம் கட்சி வேறுபாடின்றி சிங்கள அரசியலில் ஆழமாக வேரூன்றி விட்டதையும், மதம், அரசியல் என்ற எல்லைக் கோடுகளை மீறி இனவாதம் பரவலான நிறுவன மயமாக்கப்பட்டிருக்கின்றது என்பதையுமே சிங்கள அரசியல்வாதிகளின் இந்தப் போக்கு சித்திரித்துக்காட்டுகிறது.

திரு. தொண்டமானின் சமரச முயற்சிக்கும் அவரது தீர்வுத் திட்டத்திற்கும் பிரேமதாசாவின் ஆசீர்வாதம் கிடைத்திருக்கலாமெனக் கருதுவது

தவறு. பிரேமதாசாவினதும், ஆளும்கட்சியினதும் அனுசரணை பெற்ற தீர்வுத்திட்டத்திற்குப் பௌத்த பீடம் இத்தகைய எதிர்ப்பைக் கிளப்பி யிராது.

பிரேமதாசா பௌத்தபீடத்தின் தீவிர ஆதர வாளர். பௌத்த சாசனத்தின் பாதுகாவலர். பௌத்த கோட்பாடுகளை அரசியல் பிரமாணங் களாக மாற்ற முயல்பவர். தினமும் பௌத்த ஆலயங்களுக்குச் சென்று பிரித் ஓதுபவர். பௌத்த குருமாரின் காலடியைப் பூசிப்பவர். மதமும், அர சியலும் சங்கமமாகிய நீரோட்டத்தில் குளிப்ப வர். அப்படியான ஒரு சிங்கள - பௌத்த தலை வரின் ஆசிபெற்ற ஒரு தீர்வுத் திட்டத்தை பௌத்த பீடம் இப்படி வெறிகொண்டு எதிர்த் திராது.

திரு. தொண்டமானின் சமரச முயற்சிக்கு பிரேமதாசாவின் ஆசீர்வாதம் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை. பௌத்த பீடத்தின் எதிர்ப்பிற்கு பிரேமதாசா ஆசி வழங்கியிருக்கலாம் எனத்தான் நம்பவேண்டியிருக்கிறது. மல்வத்தை மகாநாயக்கரை பலாலிக்கு அனுப்பி இராணு வத்தினருக்கு ஆசிவழங்கக் கேட்டுக் கொண்ட பிரேமதாசா, தொண்டமானின் சமாதான முயற் சிக்கு எப்படி ஆசி வழங்குவது? கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களாக விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் மத்தியில் கொழும்பில் பேச்சுவார்த்தை நடைபெற்ற பொழுது, எந்த உருப்படியான தீர் வுத்திட்டத்தையும் முன்வைக்காமல் பிரேமதாசா காலத்தைத் தட்டிக் கழித்து வந்தார். கலந்தாலோ சனை, கருத்தொற்றுமை, விட்டுக்கொடுப்பு என்ற

தத்துவத்தைப் பேசிவந்தாரே தவிர, தமிழரின் பிரச்சினைகளைப் பேசவில்லை. அந்த நேரத்தில் புலிகளின் கோரிக்கைக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தக்கூட, அவர் முன் வரவில்லை.

மற்றவர்கள்மூலமாகத் தனது கருத்துக்களைத் தெரிவிப்பதில் பிரேமதாசா ஒரு வித்தகர். அப்பொழுது அமைச்சர் ரஞ்சனும், இப்பொழுது மகாநாயக்க தேரர்களும் பிரேமதாசாவின் மொழியில் பேசுகிறார்கள்.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டம் அமைச்சர் அவையில் விவாதிக்கப்படவில்லை. ஆளும் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில்பேசப்படவில்லை. தனிநபரின் முயற்சிகளுக்குத் தடை விதித்து விட்டு, பல தரப்பினரின் கருத்தொற்றுமை மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இனப் பிரச்சினை பற்றிய தீர்வுகளை ஆராயும் பாராளுமன்றத்தெரிவுக்குழுவிலும், ஆளும் கட்சியே ஆட்சி புரிகிறது. இங்குதான் திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டத்திற்கு இறுதியான ஆப்பு வைக்கப்பட்டது. பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் வெளியே பேசப்படக்கூடாது, பகிரங்க விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடாது என நிறைவேற்றப்பட்ட தீர்மானம், தொண்டமானின் சமாதான முயற்சிக்கான கதவுகளை மூடிவிட்டது. எனவே இந்தச் சமரச முயற்சிக்கு முட்டுக்கட்டை போடப்பட்டதற்கு, பிரேமதாசா அரசே காரணகர்த்தா என்று திடமாகச் சொல்லலாம்.

தமிழீழ மக்களுக்கு ஒரு குறைந்தபட்ச சுயாட்சியை வழங்கத்தானும் சிங்கள தேசம் தயாராக இல்லை. திரு. தொண்டமானின் சமாதான முயற்சியும், அதற்கு எதிராக வெடித்த சிங்களப் பேரினவாத எழுச்சியும் இந்த அரசியல் உண்மையையே எடுத்தியம்புகிறது.

நீண்டநெடுங்காலமாகத் தமிழ் மக்கள் சிந்திய இரத்தமும் கண்ணீரும், அவர்கள் அனுபவித்த தாங்கொணாத் துயரும், சிங்களப் பேரினவாதிகளின் மனதிலும் உணர்விலும் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவரவில்லை என்பது, மிகவும் கவலைக்குரிய விடயமாகும். ✻

Tamileelam Archive

பின்னிணைப்பு:

## இ. தொ. கா. தலைவர்

## திரு. சௌ. தொண்டமானின்

# தீர்வுத் திட்டம்

Tamileelam Archive

சௌ. தொண்டமான்,
பாராளுமன்ற உறுப்பினர்,
தலைவர்,
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்,
டிசம்பர் 10 ஆம் நாள் 91.

மங்கள முனசிங்கா அவர்கள்,
தலைவர்,
சிறீலங்கா பாராளுமன்றத்தின் தெரிவுக்குழு,
சிறீ ஜெயவர்த்தனபுர,
கோட்டை.

என் அன்புசால் தலைவருக்கு,

## சிறீலங்காவில் அமைதியும் அரசியல் உறுதிப்பாடும்: ஒரு மகஜர்.

இந்நாட்டுல் அமைதியையும், உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை உருவாக்குவதற்கு ஒரு பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டிருப்பதை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வரவேற்கின்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் என்ற வகையில் இந்தக்கருத்துரையை (மகஜரை) நான் இப்பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சிறீலங்கா சமுதாய அமைப்பில் நிலைக்களனாக விளங்கும் பல்வேறு இனம் சார்ந்த இயல்பு ஒரு மாற்ற முடியாத உண்மையாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்பது அடிப்படைக் கோட்பாடாகத் தோன்றுகிறது. சிறுபான்மையினரின் மொழி, பண்பாட்டியல் சார்ந்த தனித்தன்மை வேற்றினத்தின் பண்பாட்டியலுடன் கலந்து கரைந்து ஒன்றிப்போகக் கூடியது என்று கருத முடியாத அளவுக்கு அவை தெளிவானவையும், வெளிப்படையானவையுமாகும். அவர்களின் கவலைகள் (ஏக்கம்) அவர்களின் உளப்பாங்கின் உணர்ச்சிப் பிரதிபலிப்புடன் நோக்கப்படவேண்டியவை. அவர்களின் அச்ச உணர்வுகள் அகற்றப்படவேண்டியன. நம்பிக்கையற்ற உணர்வு, பகைமையுணர்வு ஆகியவற்றை அகற்றி இணக்கமான சூழலை உருவாக்கிடுவது நாட்டின் பொறுப்புவாய்ந்த தலைமைக்கு இன்றுள்ள பெரும் சவாலாகும்.

அமைதிக்கான அடிப்படை வேலையைச் செய்வதற்கான முக்கிய அரசியல் ஒழுங்குகளை உருவாக்குவதில் பாராளுமன்றம் தேவையான சட்ட நடவடிக்கைகளைக் கொண்டு வருவது முக்கியமாகும்.

அவை புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு ஆகிய உணர்வுகளை உள்ளடக்கியவையாக, சிறுபான்மையினர் தங்கள் வேட்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்றவகையில் அவர்கட்கு உதவிடுவதாக இருக்கவேண்டும். சமாளிக்க முடியாத அளவுக்கு உருவாகிவிட்ட ஒரு நிலையை மாறுபடும் சிந்தனையோட்டத்தில் உருப்பெறும் ஆயுதபலத்துடன் சமமாக்க முயற்சிப்பதன் மூலம் தீர்க்க முடியாது என்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

வட - கிழக்கு மாகாண மக்களுக்கு மிகக்கூடிய சுயாட்சியை வழங்குவதன் மூலம்தான் நாடு சிதறுண்டுபோவதைத் தடுக்கலாம் என்பதுவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் கருத்தும், காட்சியுமாகும்; அல்லது அறிவுசார்ந்த விளக்கமுமாகும். பெரும்பான்மைச் சமூகமும் மத்திய அரசும் வட - கிழக்கு மாகாண மக்களுடன் அதிகாரத்தைப் பங்கிட ஒப்புக்கொள்வதுதான் அமைதிக்கு அத்தியாவசியமாக வேண்டப்படுவதாகும்.

வட - கிழக்கு மாகாண மக்களுக்குச் சுயாட்சி அளித்திடும் நோக்கில் அமையவேண்டிய ஒழுங்குகளைத் தெளிவுறக் கூறும் வகையில் சமர்ப்பிக்கப்படும் இந்தக் கருத்துரை (மகஜர்) முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவரவும், அமைதியை நோக்கிய பயணத்தை முன்னெடுக்கவும் எல்லாத்தரப்பு அரசியல் அபிப்பிராயத்தின் ஆதரவையும் நாடுகின்றது. இந்தத் தெரிவுக்குழு, அமைதிக்கான இத்தீர்வுத்திட்டத்தை வகுப்பதற்குதன் முதிர்ந்த அரசியல் ஆளுமையைத் தன்பணிக்குப் பிரயோகிக்கும் என்று நான் நம்புகிறேன்.

உங்கள் நம்பிக்கை மிக்க,<br>
சௌ. தொண்டமான் (ஒப்பம்)<br>
தலைவர்,<br>
இ. தொ. கா.

# வடக்கு - கிழக்கிற்கான சுயாட்சி

*அறிமுக முன்னுரை*

வட- கிழக்கு மாகாண மக்களின் சுயாட்சிக்கான போராட்டம் மாகாணசபை முறை உருவாக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தது. இந்தமுறையில் மூன்றாண்டுகால செயற்பாட்டின் பட்டறிவின் அடிப்படையில் மாகாண சபை கொண்டுள்ள அதிகாரங்களின் மீதான வரையறையை சிறீலங்கா அரசு புரிந்துகொண்டிருக்கிறது. மாகாண அரசின் அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடுகள் தெளிவாகத் தெரிந்தவையே. வட - கிழக்கு மாகாணசபையினதும், மாகாண அரசினதும் பயனுள்ள தொழிற்பாட்டினைச் சுருங்கிடச் செய்த சட்ட, நிர்வாக அதன்மீது கொண்டுள்ள மனப்பான்மை ரீதியிலான தடைகளை ஏற்றுக்கொண்டு, சிறீலங்கா அரசு ( அந்தத் தடைகளை நீக்கும் பெரும் நோக்குடன் ) தேவையான தொடர்புடைய அரசியல் யாப்புத் திருத்தங்களையும் அவசியமான சட்ட ஆக்கங்களை உருவாக்குவதற்கும்வட-கிழக்கு மாகாணத்தின் சுயாட்சிக்கான அமைப்பினை வலுவுள்ளதாக்குவதற்கு இடைவிடாது தன்னை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்.

இந்தச் சுயாட்சி அமைப்பு மாகாணசபை என்றோ, பிரதேசசபை என்றோ, அல்லது மாநிலசபை என்றோ அல்லது மாநிலஅரசு என்றோ அல்லது வலயசபை என்றோ எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும் வட-கிழக்குவாழ் மக்கள் தங்கள் வேட்கைகளைப் போதுமான வகையில் நிறைவேற்றிக் கொள்ளும் விதத்தில் தாராளமான செயலுரிமையை கொண்டிருப்பது அவசியமானது. உண்மையான பொருள் பொதிந்த கருத்தில் சுயாட்சி என்பது அடிப்படையாக இருக்கவேண்டும். மேற்கூறிய பெயர் மீதான ஒருமித்த கருத்து உடன்பாடு வெளிவரும் வரை சுயாட்சிக்கான அமைப்பு என்ற பதம் உபயோகிக்கப்படுகின்றது.

சுயாட்சிக்கு அடிப்படையான சாராம்சத்தை அல்லது பொருள் தத்துவத்தைக் கொடுப்பதற்கு இந்தச் சுயாட்சி உடைய வட - கிழக்குப் பிரதேசத்தை நிர்வகிக்கும் சில நிறுவனங்களின் மேலோட்ட ஆய்வு கொடுக்கப்படுகின்றது. முஸ்லிம் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சில உத்தேசத் திட்டங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. வட- கிழக்கில் வாழும் சிங்கள மக்களின் நலனைப் பாதுகாப்பதற்கான தேவையும் புரிந்துகொள்ளப்படுகின்றது. அதிகாரப் பகிர்வுக்கான ஒழுங்கு விளக்கமாகக் கூறப்படுகின்றது.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No ........

## சுயாட்சிக்கான நிறுவனம் (அல்லது அமைப்பு)

பிரித்துக் கூறுபடுத்தப்படாத வட - கிழக்கு மாகாணத்துக்கான சுயாட்சி நிறுவனம் ஜனாதிபதி குறிக்கும் திகதியில் நிறுவப்பட்டு அன்று முதல் செயற்படும். வட - கிழக்கு மாகாணத்தின் எல்லைகள் அச் சுயாட்சி நிறுவனத்தின் இணக்கத்துடன் தவிர மாற்றப்படமாட்டாது.

### ஆளுநர்

மாகாணத்தின் முதல் அமைச்சரின் இணக்கத்துடன் ஜனாதிபதியினால் வட - கிழக்கு மாகாணத்திற்கான ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

ஜனாதிபதியின் விருப்பம் நீடிக்கின்ற காலப்பகுதிவரை ஆளுநர் பதவி வகிப்பார்.

இரண்டாவது பதவியின் ஏற்பாடுகளுக்கு அமைய ஆளுநரின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

### முதல் அமைச்சர் (முதல்வர்)

சுயாட்சிக்கான நிறுவனத்துக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் அரைப்பங்கிற்குக் கூடுதலானோர் ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினராக இருக்கும் பட்சத்தில் ஆளுநர் அந்த அரசியற் கட்சியின் தலைவரை முதல் அமைச்சராக (முதல்வராக) நியமிப்பார்.

ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினராக உறுப்பினர்களின் அரைப் பங்கினர் இல்லாத பட்சத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதில் கூடிய ஆற்றலைப் பெற்றவர் என்று ஆளுநர் அபிப்பிராயப்படும் ஒருவரை அவர் சுயாட்சி நிறுவனத்துக்கு முதல் அமைச்சராக நியமிப்பார்.

### அமைச்சர் குழு

முதல் அமைச்சரைத் தலைவராகக் கொண்ட அமைச்சர் குழு ஒன்று அமைக்கப்படும்.

முதல் அமைச்சரின் ஆலோசனையின் பேரில் அந்த நிறுவனத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து ஏனைய அமைச்சர்களை ஆளுநர் நியமிப்பார்.

வட - கிழக்கு மாகாணத்தின் அமைச்சர் குழுவின் உருவாக்கம் பத்துக்கு மேற்படாமல் மட்டுப்படுத்தப்படும்.

அமைச்சர் குழுவினர் மாகாணசபைக்குக் கூட்டுப் பொறுப்புடையவர்களாகவும், பதிலளிக்க வேண்டியவர்களாவும் இருப்பர்.

மாகாண அரசுக்கு முதல் அமைச்சரால் விடுக்கப்படும் சட்டவிடயங்கள் சம்பந்தமாக ஆலோசனை வழங்குவது வழக்குரைஞர் நாயகத்தின் கடமையாக இருக்கும்.

### சபைச் செயலகம்

சுயாட்சிக்கான நிறுவனம் அதன் சொந்தச் செயலக அலுவலர்களைக் கொண்டிருக்கும். சட்ட ஆக்கத்தின்மூலம் அந்த அலுவலர்களின் ஆட்சேர்ப்பு, பணி நிபந்தனைகள் ஆகியவற்றைச் சபை கட்டுப்படுத்தலாம்.

### தலைமைச் செயலர்

மாகாண முதல் அமைச்சரின் ஆலோசனையின் பேரில் வட - கிழக்கு மாகாணத்திற்கான தலைமைச் செயலரை ஆளுநர் நியமிப்பார்.

### செயலர்கள்

அம்மாகாண முதல் அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஆளுநர் வட - கிழக்கு அரசுக்குச் செயலர்களை நியமிப்பார்.

### வழக்குரைஞர் நாயகம்

மாகாணத்தின் பிரதம நீதியரசரோடு கலந்தாலோசித்து வட-கிழக்கு மாகாண ஆளுநர், மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படும் தகைமையுடைய ஒருவரை வட - கிழக்கு மாகாணத்தின் வழக்குரைஞர் நாயகமாக நியமிப்பார்.

அவருடைய சேவை ஒப்பந்தத்திற்கு அமைய ஒழுங்காக வேலை செய்யும் வரை வழக்குரைஞர் நாயகம் பதவி வகிப்பார்.

## நீதி பரிபாலனம் வட-கிழக்கு மாகாணம்

### தற்போதைய நீதித்துறை நீதிமன்றங்களும் அவற்றின் கருமங்களும்

அ) உயர்நீதிமன்றம்—அரசியல் யாப்பின் 105 ஆவது பிரிவு.

ஆ) மேல்முறையீட்டு நீதிமன்றம்—அரசியல் யாப்பின் 137—146 வரையான பிரிவுகள்.

இ) மேல் நீதிமன்றம் — அரசியல் யாப்பின் 111 பிரிவு.

ஈ) முதல் நிலை நீதிமன்றங்கள் என்றவகையில் அமையும் மாவட்ட நீதி மன்றங்கள், நீதவான் நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றங்கள், தொழில் நீதிமன்றங்கள் எனப்படுகின்றவையும் ஏனைய நீதிமன்றங்களும், விசாரணை நீதிமன்றங்களும் நீதித்துறைச்சட்டத்தில் இவற்றின் அதிகாரங்களும் கருமங்களும் விதிக்கப்பட்டவாறு:

## அ) வட - கிழக்கிற்கான நீதித் துறை

1) மாவட்ட நீதிமன்றங்கள்,
2) நீதவான் நீதிமன்றங்கள்,
3) ஆரம்ப நீதிமன்றங்கள்,
4) விசாரணை மன்றங்களும், நீதிவழங்கும் கருமங்களைப் பிரயோகிக்கும் ஏனைய நிறுவனங்களும்.

இதற்கான நீதிபதிகளும் இந்த மன்றங்களில் தலைமை தாங்கும் அலுவலர்களும் வட-கிழக்கு மாகாணத்தின் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர்.

இவை வட-கிழக்கு மாகாணத்தின் நீதிச் சேவை ஆணைக் குழுவின் அதிகார வரம்புக்கு உட்படும் என்பதைத்தவிர வேறு வகையில் மாற்றம் எதுவும் கருதப்படவில்லை. இவற்றின் அதிகாரங்களும் செயற்பாடுகளும் நீதித்துறைச் சட்டத்தில் விதிக்கப்பட்டவாறு.

## ஆ) வட - கிழக்கு மாகாணத்தின் மேல் நீதிமன்றம்

1) மேல் நீதிமன்றம்: (மேல் முறையீட்டுப் பிரிவு கொண்ட மேலாதிக்க நீதிமன்றம்) மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதே நியாய ஆதிக்கத்தைக் கொண்டதாக இது அமையும். (அரசியல் யாப்பின் 137 இலிருந்து 146 பிரிவுச் சரத்துக்கள் வரை) இந்த நீதிமன்றத்துக்குத் தேவைப்படும் நீதிபதிகளுடன் சேர்த்து பிரதம நீதியரசர் தலைமை தாங்குவார். இவர்கள் மாகாண முதல்

அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர். இதிலிருந்து உயர் நீதிமன்றத்துக்கு மேன் முறையீடுகள் செய்யப்படலாம்.

2) மேல் நீதிமன்றம்: முதல் நிலையான நீதிமன்று என்ற வகையில் குற்றவியல் வழக்குகளையும், ஆரம்ப நீதிமன்றத்தில் உள்ள மேல் முறையீடுகளையும் விசாரிக்கலாம். இந்த நீதிமன்றங்களுக்கு மேல் நீதிமன்ற ஆணையாளர்கள் தலைமை தாங்குவர். (111A பிரிவு) இவர்கள் மாகாண முதல் அமைச்சரின் விதந்துரையின் பேரில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர்.

## இ) வட - கிழக்கு மாகாணத்திற்கான நீதிச்சேவை ஆணைக்குழு

இதன் தலைவராக வட-கிழக்கு மாகாணத்தின் மேல் நீதிமன்ற பிரதம நீதியரசர் பணியாற்றுவார். அவரோடு கூட அவரின் ஒத்த அதிகாரங்களோடு மேல் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் ஒருங்கிணைந்து பணியாற்றுவர். அவர்களும் இப்போ உள்ள நீதிச் சேவை ஆணைக்குழு போன்று அதே கருமங்கள், சிறப்புரிமைகள், சிறப்பான விலக்குகள் (பாதிக்கப்படாத தன்மை) ஆகியவற்றை அனுபவிப்பர். ஆனால் இவையாவும் வட-கிழக்கு மாகாணத்துக்குள் மட்டும் வழங்கும். நீதிச்சேவைஆணைக் குழுவிற்கான நியமனங்கள் சிறீலங்கா குடியரசுத் தலைவரால் செய்யப்படும்.

## முஸ்லிம் மக்களின் பிரச்சினை

வட-கிழக்கு மாகாணத்திற்கு அதிகாரமும், அனுமதியளிக்கப்படும் அதிகாரமும் மாற்றப்படுகின்ற சூழ்நிலையில் அந்த மாகாணத்தில் உள்ள சிறுபான்மையினரின் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டிய தேவையுமுள்ளது.

முஸ்லிம் சமூகம் வட-கிழக்கு மாகாணத்தில் எண்ணிக்கை ரீதியில் சிறுபான்மையினராக இருக்கின்ற போதிலும், இந்த மாகாணத்தில் உள்ள பெரும்பான்மைச் சமூகத்திற்கு இளைத்தவர்கள் அல்ல; எல்லா விதத்திலும் சமமான நிலையினர் என்ற உத்தரவாதம் அளிக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்; இப்படிப்பட்ட மனப்பாங்கு உருவாக்கப்படவேண்டும்.

புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல், நல்லெண்ணம் ஆகியன சட்ட வாக்கங்களிலும் பார்க்க அதிக வலுவுடையன என்பது, நினைவு கூருவதற்கு அவசியமாகும். இவற்றை உருவாக்குவதும் நல்லிசைவான எதிர்கால

உறவினைத் திட்டமிடுவதும் வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள சமூகங்க ளின் ஆற்றலுக்கு விடப்படுகிறது.

இதற்கு உத்தரவாதம் அளிப்பதற்கு அரசியல் யாப்பு ரீதியான பாதுகாப்புகள் வழங்கப்படவேண்டும்; நிருவாக ஒழுங்குகளும் ஏற்றவகை யில் செய்யப்படவேண்டும். இந்தவகையில் சிறப்பான கவனத்தை ஈர்க்கும் பகுதிகள் பின்வருமாறு:

அ) நிலம்.
ஆ) சட்டமும் ஒழுங்கும்.
இ) நிதியும் நிதிசார்ந்த நிறுவனங்களும்.
ஈ) கல்வியும் பண்பாடும்.
உ) விவசாயம்.
ஊ) மீன்பிடித் துறை.
எ) கைதொழில்.
ஏ) வணிகம்.

அரசியல் நிர்வாக ஒழுங்குகள் வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பான்மை, மற்றும் சிறுபான்மை மக்களின் நலன்களைக் கணக்கில் எடுக்க வேண்டும். சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் அவர்கள் வேட்கைகள் பேணப்படும் என்றும் அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக, அமையப்போகும் தீர்வு இருக்கவேண்டும். வட-கிழக்கு மாகாணத்தில் வதிகின்ற முஸ்லிம்களாகிய முக்கிய சிறுபான்மையினருக்காக சில ஆலோசனைகள் பரிசீலனைக்கு மேலோட்டமாகத் தரப்படுகின்றன.

கூறுபடுத்தபடாத வட-கிழக்கு மாகாணத்தின் ஒரே ஒரு மாகாண சபையின் அமைப்புக்குள்ளே பெரும் பகுதியான மக்களைக் கொண்ட முஸ்லிம் பிரதேசங்களை தங்கள் நிறுவன ரீதியான ஒருங்கிணைப்பைச் செய்தல்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள நிறைவான முஸ்லிம் பெரும்பான்மை யினரைக் கொண்ட பிரதேசசபைகள் ஒரு தனித்துவத்தையும், ஒத்த நலநோக்குகளையும் கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் ஒன்றிணைந்து பிரதேசசபைகளின் ஒருங்கிணைப்பினை உருவாக்கலாம். பிரதேச அடிப்படை யில் அவை ஒன்றுக்கொன்று அணித்தாக இல்லாவிடினும் பிரதேசசபை களின் இணைப்பு என்ற ஒரு அமைப்பினால் அவை நிர்வகிக்கப்படலாம்.

இந்த இணைப்பு மாகாண சபையின் முஸ்லிம் உறுப்பினர்களாலும், பிரதேசசபைத் தலைவர்களாலும் உருவாக்கப்படும்.

## சுயாட்சியின் அலகு

கூறுபடுத்தப்படாத வட-கிழக்கு மாகாண வரம்பிற்குள் நிறைவான முஸ்லிம் பெரும்பான்மை கொண்ட பிரதேசசபைகள் இணைந்த பிரதேச சபை இணைப்பினைக் கொண்டிருக்கும். இந்த இணைப்பே அதிகாரம் மாற்றப்படும் அலகாக அமையும்.

பிரதேசசபைகளின் இணைப்பு என்று அழைக்கப்படும், தீர்மானம் இயற்றும் வலுவுள்ள இந்த அமைப்பு பின்வருமாறு அமைக்கப்படும்.

## அனுமான அடிப்படையிலான கணிப்பு

முஸ்லீம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசசபைகள் பத்தாக இருக்குமிடத்து அந்தப் பத்து (எண்ணிக்கை கொண்ட) பிரதேசசபைகளின் தலைவர்களும், பிரதேசசபை இணைப்பின் உறுப்பினர் ஆவார். மாகாண சபையின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை பதினைந்தாக இருக்குமிடத்து அவர்கள் எல்லோரும் பிரதேசசபை இணைப்பின் உறுப்பினர்களாவர். ஆகவே பிரதேசசபைகளின் இணைப்பு இருபத்தைந்து (25) உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

இணைப்பில் மாகாணசபை உறுப்பினர்களின் அங்கத்துவம் — (அ) எல்லா முஸ்லிம் பிரதிநிதிகளிடையே நெருங்கிய பேச்சுவார்த்தையை உறுதிப்படுத்தவும்; (ஆ) கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றை வகுப்பதிலும், அமுலாக்குவதிலும் பெருமளவில் கூடிப் பணிசெய்வதை உறுதிப்படுத்தவும் உறுதிசெய்யும்.

மாகாணசபை நிரல் விடயங்கள் சம்பந்தமான தீர்மானங்கள் பிரதேசசபை இணைப்பினால் மேற்கொள்ளப்படும்.

பிரதேசசபை இணைப்பு அதனுடைய செயலகம் அமையும் இடத்தைத் தீர்மானிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

## நிலம்

பிரதேசசபை இணைப்பு, பிரதேசசபைகளின் எல்லைக்கு உட்பட்ட அரச காணிகளை நிர்வகிக்கின்ற, கட்டுப்படுத்துகின்ற, பயன்படுத்துகின்ற பணிகளைப் புரியும். மாகாண அரசினால் பிரதேசசபைகளின் வரம்புக்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA

குட்பட்ட அரச நிலங்கள் தேவைப்படும் பொழுது பிரதேசசபை இணைப்பின் இணக்கத்தோடு பயன்படுத்தப்படும். பிரதேசசபையில் காணிப்பங்கீட்டிற்குக் கிடைக்கக்கூடிய நிலம் பிரதேசசபையின் இன விகிதாசாரத்திற்கு ஏற்றபடி பிரதேசசபை இணைப்பினால் வழங்கப்படும்.

மாகாண சபையினால் பகிர்ந்தளிக்கப்படும் நிலத்திற்கு அவை ஒதுக்கீடு செய்யப்படும் போது அந்த மாகாணத்தில் உள்ள முஸ்லீம்களின் இன விகிதாசாரத்திற்கு ஏற்ற விதத்திலேயே முஸ்லிம்கள் அந்தப்பங்கினைப் பெற உரித்துடையவர்கள்ஆவர். இந்த உரித்திற்கு மேலதிகமான எந்த அளவும் கள நிலவரப்படியே தீர்மானிக்கப்படும்.

வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்கள் இந்த மாகாணத்தின் எப்பகுதியிலும் உள்ள அரச காணிக்கு உரித்துடையவர்கள்.

1986ஆம் ஆண்டு நகல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள தீர்மானங்களின் அடிப்படையிலேயே மகாவலி நிலம் பகிர்ந்தளிக்கப்படும்.

மாகாண நில ஆணைக்குழுவில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.

## சட்டமும் ஒழுங்கும்

பிரதேசசபை இணைப்பின் காவல்துறை அலுவலர் எண்ணிக்கையானது அவ்விணைப்பின் சனத்தொகை, காவல் நிலையங்களின் எண்ணிக்கை, பிரதேசம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு மாகாண அரசினால் நிர்ணயிக்கப்படும்.

வட-கிழக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கு மாகாண அரசு,சகல தரத்தினரையும் கொண்ட பத்தாயிரம் காவலர்களுக்குக் குறையாத காவல் துறையினை அமைக்கவேண்டும் என்று மதிப்பிடப்படுகிறது.

இன விகிதாசார அடிப்படையில் மாகாண காவல்துறைக்கான ஆட்சேர்ப்பு கீழ்க்கண்டபடி அமையவேண்டும்.

| | | வட-கிழக்கு மாகாண மக்கள்தொகை வீதம் | விகிதாசார ஆட்சேர்ப்பு | முழுமையாக்குக |
|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழர் | — | 65 07 | 6507 | 6500 |
| இந்தியத் தமிழர் | — | 3.57 | 357 | 375 |
| முஸ்லிம்கள் | — | 17.56 | 1756 | 1775 |
| சிங்களவர் | — | 13.37 | 1337 | 1350 |
| | | | மொத்தம் | 10,000 |

மிகப் பெரும்பான்மை முஸ்லிம் பகுதிகளில் காவல்துறை ஆளணியினரை நியமிக்கையில் பிரதேசச்சபைப் பகுதியின் இன விகிதாசாரத்திற்கு அமைவாக நியமிக்கவேண்டும். கள நிலைகளுக்கு ஏற்றவகையில் மேற்கூறிய கோட்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படும்.

பிரதேசசபைகளின் ஒருங்கிணைப்பின் கீழ்ப் பணியாற்றும் சகல காவல்துறை அலுவலர்களும் பிரதேச சபைகளின் ஒருங்கிணைப்பின் முஸ்லிம் பிரதிக் காவல்துறை மா அதிபரின் வழிநடத்தலுக்கும், கட்டுப்பாட்டுக்கும் கீழ் பணியாற்றுவர். பிரதிக் காவல்துறை மா அதிபர் மாகாண காவல்துறை அதிபருக்கு பொறுப்புக்கொடுக்க வேண்டியவராகவும் அவரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவராகவும் இருப்பார்.

## நிதி ஒழுங்குகள்

மாகாணசபைக்கான நிதி முக்கியமாக பின்வரும் வழிகளில் வந்து சேரும்.

1) அரச கொடுப்பனவுகள்.
2) வரிகள்.
3) நிதி நிறுவனங்கள்.
4) வெளிநாட்டு உதவி.

வட-கிழக்கு மாகாணசபைக்குரிய நிதிவள சேர்ப்பிற்கு மத்திய அரசினால் கையாளப்படும் அதே பிரமாணம் முஸ்லிம் மக்களின் பிரதேச சபை இணைப்பிற்கான நிதிவள சேர்ப்பிற்கும் பிரயோகிக்கப்படும்.

பிரதேசசபை இணைப்பு நிதி நிறுவனங்களை நிறுவுவதற்குரிய செயலுரிமையைக் கொண்டிருக்க வேண்டும்.

## வெளிநாட்டு உதவி

மாகாண அரசின் அங்கீகாரத்திற்கு உட்பட்ட வகையில் பிரதேச சபைகளின் இணைப்பு சர்வதேச நிறுவனங்கள், ஐக்கிய நாடுகளின் முகவர் நிலையங்கள், மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் வெளிநாட்டு நிதி உதவி பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்த உரிமையுடையதாயிருக்கவேண்டும்.

## பொதுப்பணி

மாகாணப் பொதுப்பணி பின்வரும் அமைப்பினை உள்ளடக்கும்.

அ) அகில இலங்கை சேவைகளிலுமிருந்து கொடுத்துதவப்படும் அலுவலர்கள்.

ஆ) மாகாணப் பொதுப்பணிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள்.

பிரதேசசபைகளின் தேவைகள் அகில இலங்கை சேவை அல்லது மாகாணப் பொதுப்பணி ஆகியவற்றிலிருந்து பிரதேசசபை இணைப்பின் தேவைக்கு ஏற்றபடி அலுவலர்களைப் பெற்று நிறைவேற்றப்படும்.

பிரதேசசபைகளின் இணைப்பிற்கான அலுவலர் பகிர்ந்தளிக்கப்படும் போது மாகாண இன விகிதாசாரம் பேணப்படவேண்டும்.

**கல்வி**

கல்வித்துறையில் பிரதேசசபைகளின் இணைப்பு பாடத்திட்ட அபிவிருத்தி, பாட நூல்கள் தெரிவு, கல்வி நிறுவனங்களை நிறுவுதல் போன்றவற்றில் செயலுரிமை கொண்டிருக்க வேண்டும்.

## சிங்கள சிறுபான்மையினருக்கான பாதுகாப்புக்கள்

வட - கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள மக்களின் நிலை இந்த மாகாணத்தில் உள்ள ஏனைய சிறுபான்மையினரின் நிலையிலும் பார்க்க குறிப்பிடத்தக்க வகையில் வித்தியாசப்படுகின்றது. இந்த மாகாணத்தில் உள்ள சிங்கள சனத்தொகையின் பாதுகாவலனாகவும், அவர்களின் மேல்முறையீடுகளை விசாரிக்கும் நிறுவனமாகவும் நடுவன் அரசு இருக்கிறது இருந்த போதிலும் சுயாட்சி வழங்கப்படும் ஒரு சூழ்நிலையில் சிங்கள மக்கட்கு உரிய பாதுகாப்புக்களை வழங்குவது மாகாண அரசின் பொறுப்பாகும்.

வட - கிழக்கு மாகாணத்தின் எந்தப் பகுதியிலும் சிங்கள மக்கள் சொத்துக்களை உடைமையாக்கும் உரிமை கட்டுப்பாடு அற்றதாக இருக்க வேண்டும்.

மாகாண எல்லைக்குள் உள்ள அரச காணி பகிர்ந்தளிக்கப்படும் போது மாகாணத்தின் இன விகிதாசாரத்தைப் பொறுத்து அமையும்.

1986 ஆம் ஆண்டு நகல் உத்தேசத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட கருத்துக்கு இணங்க மகாவலி நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.

சிங்கள காவல்துறையினரின் எண்ணிக்கை மாகாணத்தில் உள்ள சிங்கள மக்களின் விகிதத்தைப் பொறுத்து அமையும்.

சிங்களப் பகுதிகளில் காவல்துறையினரை கடமையில் அமர்த்துதல், பிரதேசசபைப் பகுதியிலுள்ள இன விகிதாசாரத்தைப் பொறுத்து அமையும்.

இந்த மாகாணத்தில் ஒரு சிங்கள பிரதிக் காவல்துறைக் கண்காணிப்பாளர் நாயகம் ( D. I. G. ) பொறுப்பில் இருப்பார். அவர் மாகாண அரசின் காவல்துறை கண்காணிப்பாளர் நாயகத்திற்கு (I. G. P.) பொறுப்புள்ளவராகவும் அவரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிபவராகவும் இருப்பார்.

மிகப் பெரும்பான்மையாக சிங்களவர் வதியும் பகுதிகளுக்கு நிதி வளங்கள் பகிர்ந்தளிக்கப்படும் போது, வட - கிழக்கு மாகாணத்துக்கு மத்திய அரசு வழங்கும் நிதிகளுக்குக் கடைப்பிடிக்கும் அடிப்படை முறைகளே பேணப்படும். இத்தகைய நிதிகள் வளர்ச்சித்திட்டங்களுக்கும், பேணலுக்கும் செலவிடப்படும். சிங்கள மக்களின் மொழி மற்றும் பண்பாடு பரிசுத்தமானதாகக் கருதப்படும். அவர்களின் மொழி, பண்பாடு ஆகியவற்றை வளர்க்கக் கூடிய கொள்கைகள் உருவாக்கப்படும்.

## அதிகார மாற்றுத் திட்டம்

பிரதேச வரம்பிற்குள் பிரத்தியேகமாகக் கொண்டுவரப்படும் கருமங்கள், விடயங்கள் ஆகியவற்றின் பரம்பல் அடிப்படையிலும் பகிர்ந்து அளிக்கப்படும் அதிகாரத்தின் அளவிற்கும், தன்மைக்கும் ஏற்றதாக சுயாட்சியின் அளவு ஒத்து இருக்கும். இந்த அதிகார மாற்றினை பயனுள்ளதாக்குவதற்கு அரசியல் யாப்பைத் திருத்தும் போது 13 ஆவது திருத்தச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள மாகாண நிரலில் உள்ள விடயங்களும் கருமங்களும், ஒதுக்கப்பட்ட நிரலிலும் பொது நிரலிலும் சொல்லப்பட்டுள்ள விடயங்களிலும் பெருமளவு மாற்றம் செய்யப்படவேண்டிய தேவையுள்ளது. பொது நிரல் நீக்கப்படுவது கூர்மதியுடையதாகக் கருதப்படுகின்றது. இந்த நிரலின் விடயங்களும் கருமங்களும் மாகாண நிரலுக்கும் ஒதுக்கப்பட்ட நிரலுக்கும் பங்கிடப்பட்டிருக்கின்றன.

தொடரும் பக்கங்களில் தாக்கமான சில விடயங்கள் மீளமைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன.

# நிரல் 1 — மாகாண நிரல்

## 1) நிலம்

அ) மாகாணத்தில் உள்ள அரச காணிகள் மாகாண அரசிற்குச் சென்றடையும்.

ஆ) மாகாண எல்லைக்குள் இருக்கின்ற அரசகாணிகளை மாகாண அரசு நிர்வகிக்கும், கட்டுப்படுத்தும், பயன்படுத்தும்.

இ) குத்தகை மூலமோ அல்லது விற்பனை மூலமோ நிலத்தினை ஒதுக்கும் செயலுரிமையை மாநில அரசு கொண்டிருக்கும்.

ஈ) நடுவன் ( மத்திய அரசு ) அரசினால் வேண்டப்படுகின்ற மாகாணத்தின் வரம்புக்குட்பட்ட அரச காணிகள் மாகாண அரசின் இணக்கத்துடனே உபயோகிக்கப்படும்.

உ) சுதந்திரம் கிடைத்த காலத்தின் போது மாகாணத்தில் இருந்த இன விகிதாசாரத்திற்கு ஏற்றமுறையில் விவசாயத் திட்டங்களுக்கான குடியேற்றத்திற்கு நிலப் பங்கீடு அளிக்கப்படுவோரின் தெரிவு தீர்மானிக்கப்படும்.

ஊ) மாகாண அரசிற்கு மாகாண நில ஆணைக்குழு நிறுவும் செயலுரிமை உண்டு.

எ) மாகாண நில ஆணைக்குழு மாகாண எல்லைக்குள் உள்ள நிலப் பாவனைக்கான கொள்கையை வகிக்கும்.

ஏ) இந்த நில ஆணைக்குழுவின் தெரிவு, அமைப்பு ஆகியன மாகாண அரசின் அமைச்சர் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

ஐ) 1986 ஆம் ஆண்டு நகல் உத்தேசத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விதிக்கிணங்க மகாவலி நிலங்கள் பங்கிடப்படும்

## 2) சட்டமும் ஒழுங்கும்

2:1 மாகாண காவல்படை.

அ) வட - கிழக்கு மாகாணத்திற்கான மாகாண காவல் படையை உருவாக்குவதற்கான செயலுரிமையை மாகாண அரசு கொண்டிருக்கும்.

ஆ) வட - கிழக்கு மாகாணத்தின் மாகாண காவல்படை காவல் துறைக் கண்காணிப்பாளர் நாயகம் ( I.G.P. ), துணை காவல் துறைக் கண்காணிப்பாளர் நாயகங்கள் ( D.I.G.P. ), முதுநிலை காவல்துறை அதிபர்கள் ( S.S.P.P. ), காவல்துறை அதிபர்கள் ( S.P.P. ), உதவி காவல்துறை அதிபர்கள் ( A.S.P.P. ), ஆகியோருடன் ஏனைய தரத்தினரையும் கொண்டதாயும் மாகாண மட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவர்களாகவோ - பதவி உயர்வு கொடுக்கப்பட்டவர்களாகவோ உள்ளவர்களைக் கொண்டதாயிருக்கும்.

இ) மாகாண காவல்துறையின் எண்ணிக்கை மாகாண அரசினால் சனத்தொகை, நிலப்பரப்பு, மாகாணத்தில் உள்ள காவல் நிலையங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு தீர்மானிக்கப்படும்.

ஈ) உடனடியான ஆரம்ப ஆட்சேர்ப்பு பத்தாயிரம் காவல்துறை அலுவலர்களைப் பணியில் ஈடுபடுத்துவதற்கானதாயிருக்கும். இந்த ஆட்சேர்ப்பு மூன்று திங்களுக்குள் ( மூன்றுமாதம் ) முடிக்கப்படவேண்டும்.

உ) காவல்படை மாகாணத்திலுள்ள இன விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும்.

ஊ) மாகாண முழுமைக்கும் ஒரு காவல்படையே இருக்கும். பிரத்தியேக படை, தொண்டர் படை, சிறப்புப் படை அல்லது வேறு அலகு ஆகியவற்றை இது உள்ளடக்கும்.

எ) இந்த அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுங்காற்றுக் கட்டுப்பாடு ஆகியன மாநில அரசினால் மேற்கொள்ளப்படும்.

ஏ) இந்த மாகாணத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களும் காவல்துறை மாகாணக் கண்காணிப்பாளர் நாயகத்தின் நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் ஆகியவற்றின் கீழ் பணிபுரிவர்.

ஐ) மாகாணத்தின் காவல்துறைக் கண்காணிப்பாளர் நாயகம் (I.G.P.) மாகாணசபை முதல்வருக்குப் பொறுப்புள்ளவராகவும் அவரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிபவராகவும் இருப்பார்.

2:2 விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை காவல்துறை, இராணுவப் படை ஆகியவற்றில் சேர்த்துக் கொள்ளல்.

அ) நாட்டினுடைய காவல்படை.

1) தேசிய காவல்படையையும்,
2) மாகாண காவல் படையையும் கொண்டிருக்கும்.

தேசிய காவல்படை முழு நாட்டினதும் இன விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும். மாகாண காவல்படை மாகாணத்தில் உள்ள இன அடிப்படை விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும்.

ஆ) ஆயுதப்படைகளுக்கு ஆட்சேர்ப்பு சம்பந்தப்பட்டவிடத்தும் இதே போன்ற ஒரு அடிப்படையில் போராளிகளிலிருந்து சேர்த்துக்கொள்ளுதல் பரிசீலிக்கப்படும்.

## 3) திட்டமிடலும் பொருளாதார விடயங்களும்

அ) மாகாண அரசு ஒரு மாகாண திட்ட ஆணைக்குழுவை நிறு வும் செயலுரிமையைக் கொண்டிருக்கும்.

ஆ) மாகாண திட்ட ஆணைக்குழு

1) மாகாண பொருளாதார திட்டங்களையும்,
2) பொதுத்துறை மற்றும் தனியார்துறை முதலீட்டுத் திட் டங்களையும்,
3) வெளிநாட்டு மற்றும் உள்ளூர் முதலீட்டுக்கான நெறி முறைகள் மற்றும் உற்சாகம் அளிக்கும் தூண்டிகளையும்,
4) நிதிக் கட்டமைப்பினை விரிவாக்கம் செய்யும் திட்டத்தை யும் உருவாக்கும்.

இ) இந்த ஆணைக்குழுவின் தெரிவும், அமைப்பும் மாகாண அர சின் அமைச்சர் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

ஈ) திட்ட ஆணைக்குழுவின் தலைவர் முதல்வருக்குப் பொறுப்புள் ளவராக இருப்பார்.

## 4) நிதி ஒழுங்குகள்

அ) அரசியல் யாப்பு ரீதியாக உத்தரவாதமளிக்கப்பட்ட நிதி வளங்களின் அளவு, திரட்டு வைப்புநிதியிலிருந்து நடுவன்

(மத்திய) அரசினால் மாகாண அரசின் நிதிக்குக் கையளிக்கப்படும்.

ஆ) மாகாண அரசிற்கு அரசியல் யாப்பு ரீதியாக உத்தரவாத மளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி அளவும் இதே போன்று வழங்கப்படும்'

இ) இந்த அளவு மொத்தத் தேசிய உற்பத்தியின் ஏதேனும் வீதத்தின் அடிப்படையில் அல்லது வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

ஈ) இந்த அளவு ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்ட முறையினால் தீர்மானிக்கப் படலாம்.

உ) மாகாண அரசிற்கு வெளிநாட்டு உதவிக்காகப் பேச்சுவார்த்தை நடாத்தும் செயலுரிமை உண்டு.

ஊ) மாகாண அரசு மாகாண பொதுநிதியின் மீது முழுக்கட்டுபாட்டை வைத்திருக்கும்.

எ) மாகாண அரசின் நிதி மாகாண திரட்டு வைப்பு நிதியைக் கொண்டதாயிருக்கும். இதில் சகலவிதமான வரிப்பணங்களும் ஏனைய பணங்களும் சேர்த்துக் கொள்ளப்படும்.

எல்லாக் கொடுப்பனவுகள், கடன்கள், ஏனைய வருமானங்கள், பற்றுச்சீட்டுக்கள் ஆகியவற்றிலிருந்தும் வரும் நிதிகள் யாவும் இதில் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஏ) மாகாண அரசிற்கான முப்பதிற்கு மேற்பட்ட வருமான வரிகள் இனம் காணப்பட்டிருக்கின்றன.

## 5) மாகாண பொதுப்பணி

அ) மாகாண அரசு மாகாணத்தில் உள்ள அரச அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பணிநீக்கம், ஒழுங்காற்று கட்டுப்பாடு ஆகியவற்றின் மீது செயலுரிமை கொண்டிருக்கும்.

ஆ) இதற்கான செயலுரிமை அமைச்சர்குழுவின் கையில் வழங்கப்படும்.

இ) மாகாண அரசு அலுவலர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் செயலுரிமை மாகாண அரசுக்கு உள்ளது.

ஈ) மாகாண அரசு, அரச அலுவலர்களின் ஒழுக்கக் கோவை, ஆட் சேர்ப்பு ஆகியன சம்பந்தப்பட்ட திட்டங்களை உருவாக்கும்.

உ) ஒரு பொதுப்பணி ஆணைக்குழு நிறுவப்படும். இதில் அமைச்சர் குழுவினால் ஆளுநருக்கு விதந்துரைக்கப்பட்ட மூன்று பேர் நிய மனம் பெறுவர். இந்த மூன்று பேரில் ஒருவரை ஆளுநர் ஆணைக் குழுவின் தலைவராக நியமிப்பார்.

## 6) சேவை (அளவீடு)

அ) நில அளவைத் திணைக்களத்தை உருவாக்குகின்ற செயலுரிமை மாகாண அரசுக்கு உண்டு. இந்தத் திணைக்களத்திற்கு நில அளவை நாயகம் ஒருவர் தலைமை தாங்குவார்.

ஆ) ஆரம்பத்தில் தலைமைத் திணைக்களத்தில் உள்ள செயலுரிமை பரவலாக்கப்பட்ட பிரிவுகளில் இருந்து தொழில்நுட்ப அலுவ லர்கள் பெறப்படுவர்.

## 7) காடு வளர்ப்பு

அ) காட்டு நிலங்களைப் பாதுகாத்தல், விரிவாக்கம் செய்தல், பயன் படுத்தல்.

## 8) நீர்ப்பாசனம்

அ) திட்டமிடல், வடிவமைத்தல், எல்லாவித நீர்ப்பாசன வேலைக ளையும் அமுலாக்கல், வடிகால் திட்டங்கள், நில நீர் பயன் படுத்துகை.

## 9) விவசாயம்

அ) விவசாயம், ஆராய்ச்சி, மேம்படுத்தல், கல்வி ஆகியவை உள் ளிட

ஆ) விவசாய அடிப்படை சார்ந்த கைத்தொழில்களை நிறுவுத லும் மேம்படுத்துதலும்.

இ) பண்ணைகளை உருவாக்குதலும், நாற்றுமேடைகளைப் போடு வதும்.

ஈ) தாவரங்களுக்கான பாதுகாப்பு நிலை.

## 10) கால்நடை உற்பத்தி

அ) எல்லா வழிகளிலும் கால்நடை அபிவிருத்தி, உற்பத்தி, கால் நடை உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல்.

## 11) மீன்பிடித் துறை

அ) எல்லாவிதமான மீன்பிடித் தொழிலும் மீன்பிடித் துறைமுகங்களை அமைத்தலும், பேணுதலும்.

## 12) கூட்டுறவுத் துறை

அ) மாகாணத்துக்கு உட்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி, கூட்டுறவுப் பண்டகசாலைகளின் அமைப்பு, பதிவு, மேற்பார்வை ஆகியன.

ஆ) கூட்டுறவு வங்கிகளை அமைத்தலும் அவற்றை நடாத்தலும்.

## 13) கல்வியும் கல்விசார்ந்த பணிகளும்

அ) எல்லா அரச கல்லூரிகளுக்கும் வசதிகளை அளித்தல், மேற்பார்வை முகாமைத்துவம் ஆகியவற்றைச் செய்தல், இந்தக் கல்லூரிகளை அமைத்தல்.

ஆ) மாகாண எல்லைக்குள்ளே கல்விப்பணிக்குரிய ஆட்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல், ஒழுங்காற்றுக் கட்டுப்பாடு கொண்டிருத்தல்.

இ) ஆசிரியர்களுக்கும் ஏனைய கல்வி சார்ந்த ஆட்களுக்கும் பயிற்சி அளித்தல், திட்டங்களை வகுத்து அமுலாக்குதல்.

ஈ) தேசிய கல்வி நிறுவனத்தின் வழிகாட்டி நெறிகளுக்கு அமைய பாடத்திட்டத்தை உருவாக்குதல், அவற்றை மேம்படுத்துதல்.

உ) கல்லூரிப் பாடநூல்களைத் தயாரித்தல், பங்கிடுதல்; இதனைத் தேசிய கல்விக் கொள்கைக்கு பங்கம் ஏற்படாமல் செய்தல்.

ஊ) மாகாண அடிப்படையிலான தேர்வுகளை நடாத்துதல்.

எ) சிறீலங்காவின் நடுவன் ( மத்திய ) அரசுக்கான தேர்வுகளை நடாத்துதல்.

14) உயர் கல்வி

அ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்று பாராளுமன்ற சட்டங்களினால் தெரிவிக்கப்படுகின்றவை அல்லாத பல்கலைக்கழகங்கள்.

ஆ) பட்டம் வழங்குகின்ற நிறுவனங்கள், வேறு நிறுவனங்கள், மூன்றாம் நிலை தொழில்நுட்பம், மற்றும் கல்லூரியிலிருந்து விலகியதற்குப் பின்னான கல்விப் பயிற்சி.

15) உடல் நலம்

அ) எல்லாப் பொது மருத்துவமனைகளையும், போதனா மருத்துவமனைகளையும் நிறுவுதல், பராமரித்தல், அதற்குரிய பணியாளர்களை நியமித்தல்.

ஆ) தனியார் மருந்தகங்களையும் மருத்துவ நிறுவனங்களையும் கட்டுப்படுத்தல்.

இ) மருத்துவ ஆட்களுக்குப் பயிற்சியளித்தல்.

16) மாற்று மருத்துவம்

அ) ஆயுள்வேத, சித்த, யூனானி வைத்திய முறைகளை விரிவாக்கம் செய்தல்,

17) துயரொழிப்பும் மறுவாழ்வும்

அ) இடம் பெயர்ந்தோருக்கான துயரொழிப்பு அளித்தல், மீளக் குடியமர்த்தல்.

ஆ) மறு அமைப்பு, மறு நிர்மாணம், மறு வாழ்வு, கிராமங்கள், நகரங்கள், பொது நிறுவனங்கள், கைத்தொழில் பேட்டைகள், வர்த்தக நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், மற்றும் அழிக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட சொத்துக்கள் ஆகியவற்றைப் புனரமைத்தல்.

இ) இழப்பு அல்லது பாதிப்பு அடைந்த ஆட்கள் அல்லது நிறுவனங்களுக்கு நட்டஈடு அல்லது துயரொழிப்பு வழங்கல்.

## 18) உல்லாசப் பயணத்துறை

அ) உல்லாசப் பயணத்துறை விரிவாக்கத்திற்கான திட்டங்களை உருவாக்குதல்.

ஆ) உல்லாசப் பயணத்துறையில் பொது மற்றும் தனியார் முதலீட்டை மேம்படுத்துதலும், ஒழுங்குபடுத்தலும்.

## 19) சுரங்கங்களும் கனிப்பொருட்களும்

அ) உப்பு, உப்பளம் உட்பட சுரங்கங்கள் கனிப்பொருட்கள் ஆகியவற்றை விரிவாக்கம் செய்தல்.

## 20) சக்தி

அ) மின்சக்தி மற்றும் மரபுவழியற்ற சக்தியின் ஆக்கம்.

ஆ) மாகாணத்தின் எல்லைக்குட்பட்ட மின்னொளித் திட்டத்தின் நீடிப்பு.

## 21) துறைகளும் துறைமுகங்களும்

அ) துறைகளும் துறைமுகங்களும்.

## 22) ஒளி/ஒலிபரப்புச் சாதனங்கள்

அ) மாகாண தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்பு.

## 23) வீடமைப்பு

அ) மாகாண எல்லைக்குள்ளே வீடமைப்பு விரிவாக்கத் திட்டங்களைத் திட்டமிடலும் அமுலாக்கமும்

## 24) நகரத் திட்டமிடல்

அ) மாகாண எல்லைக்குட்பட்ட நகரசபைப்பகுதிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடல், விரிவாக்கல் ஆகியவற்றுக்கான மாகாண ரீதியிலான செயலுரிமை அவையை அமைத்தல்.

## 25) நெடுஞ்சாலைகள்

அ) படகுச்சேவை, பாலங்கள் உட்பட மாகாண எல்லைக்குட்பட்ட எல்லா நெடுஞ்சாலைகளினதும் அமைப்பும் பராமரிப்பும்.

ஆ) தேசிய நெடுஞ்சாலைகளை அதாவது மாகாணத் தலைநகரங்களையும் தேசிய தலைநகரத்தையும் ஒன்றோடு ஒன்று இணைக்கும் தேசிய நெடுஞ்சாலைகள் இவற்றுள் அடங்கா.

26) போக்குவரத்து

அ) மாகாண எல்லைக்குட்பட்ட தெருப் போக்குவரத்தினை நடாத்துதல், கட்டுப்படுத்துதல், அத்தோடு மாகாணங்களுக்கிடையிலான ஒழுங்கினை வழங்குதல்.

27) தொழில்கள், சட்டத்தொழில், மருத்துவத் தொழில், பொறியியல் தொழில் மற்றும் ஏனையவை.

28) செய்தித்தாள்கள், நூல்கள், சஞ்சிகைகள்.

29) விலைக் கட்டுப்பாடு.

30) நிறைகளும், அளவுகளும்.

31) ஆறுகளும், வாய்க்கால்களும், பிரதேச நீர்நிலைகள், உள்நாட்டு நீர்நிலைகள்.

32) கடல்வழி கப்பற் போக்குவரத்து.

33) பிரதேச கடல் எல்லைக்கு அப்பால் மீன்பிடித்தல்.

34) தொல் பதிவேடுகளைக் கொண்ட செயலகம்.

35) தொழில் நன்மை, சேமலாப நிதி, நம்பிக்கை நிதியம்.

36) சமூக பந்தோபஸ்து. சமூக காப்புறுதி.

## நிரல் 2 - ஒதுக்கப்பட்ட நிரல்.

பாதுகாப்பு

1:1 சிறீலங்காவின் பாதுகாப்பு.

1:2 கடற்படை, இராணுவ, வான்படை அமைப்புக்கள்.

1:3 கடற்படை, இராணுவ, வான்படைத் தொழிற்பாடுகள்.

2) தேசிய காவல்படை.

3) போரும் சமாதானமும்.

4) வெளிவிவகாரம்.

5) இராஜதந்திர, அரசமட்டத்திலும் மற்றும் வர்த்தகரீதியிலுமான பிரதிநிதித்துவங்கள்.

6) ஐக்கிய நாடுகள் நிறுவனம்.

7) குடிவரவு, குடி அகல்வு.

8) கடவுச்சீட்டுக்களும், வெளிநாடு செல்லும் பிரயாண ஒப்புதல்களும்.

9) சுங்கத் திணைக்களம்.

10) ஒய்வூதியம்.

11) சிறீலங்கா அரசின் பொதுக்கடன்.

12) வருமானம் — மாகாண நிரலில் வரையறுக்கப்பட்டன தவிர.

13) சிறீலங்கா அரசின் கணக்குகளின் கணக்காய்வு.

14) சிறீலங்காவின் மத்திய வங்கி.

15) நாணயக் கொள்கை.

16) நாணயம், பண ஆக்கம், வெளிநாட்டுச் செலாவணி.

17) சிறீலங்கா நடுவன் [மத்திய] அரசினுடைய வெளிநாட்டுக் கடன்கள்.

18) செலாவணிப் பரிவர்த்தனையின் கட்டுப்பாடு.

19) அணுசக்தி.
20) வானிலைக் கழகம்.
21) வானூர்திப் போக்குவரத்து.
22) கொழும்புத் துறைமுகம்.
23) தேசிய நெடுஞ்சாலைகள்.
24) தேர்தல்கள்.
25) தேசிய சீட்டிழுப்புகள்.
26) வெளிச்ச வீடுகள்.
27) தர நிர்ணயம்.
28) தேசிய பொதுப்பணி
29) தேசிய பொதுப்பணி ஆணைக்குழு.
30) அஞ்சல் தொலை தொடர்புகள்
31) நடுவன் (மத்திய) அரசினால் ஆன ஒலிபரப்பு.
32) நடுவன் அரசின் காட்சி வானொலி (தொலைக்காட்சி).
33) குடிசன மதிப்பு
34) மருத்துவப் பொருட்கள் ஆக்கம், கண்டுபிடிப்புக்கள், வடிவமைப்புக்களின் உரிமைகள், வர்த்தகக் குறியீடு, வியாபாரப் பொருட்களின் குறியீடு.
35) வாணிப கைத்தொழில் ஏகபோக உரிமைகளின் இணைப்புக்களும் நம்பிக்கைப் பொறுப்புக்களும்.
36) போதைப் பொருட்கள்.
37) தொற்றுநோய், வியாதிகள், பூச்சிகள் ஆகியனவற்றின் கட்டுப்பாடு.
38) நம்பிக்கைப் பொறுப்பும், நம்பிக்கைப் பொறுப்பாளர்களும்.
39) சொத்து மாற்றம், மற்றும் உறுதிகள் ஆவணங்களின் பதிவு.

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.________

Tamileelam Archive

Tamileelam Archive

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.____

தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of
TAMIL EELAM

வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.